Free Circulation Germany- England

மணி: 75 - ஓசை: 346 ஆடி. July 2025

# வெற்றிமணி

Vettimaniy

ESTD 1950

31TH years IN EUROPE Successful Publishing

பிரதம ஆசிரியர் மு.க.சு.சிவகுமாரன் B.F.A

Orientalisch
Textilien & Schmuck

தரமும்,
மலிவும்,
ஒரே
இடத்தில்



35 ANNIVERSARY

Königswall 16 (Am Hbf)
44137 Dortmund
Tel:0231 162377

# செம்மணி மனிதப் புதைகுழி
# இன அழிப்பின் அடையாளம்

கொழும்பிலிருந்து... என்.அசோக்



## பவள விழுக்காணும்
## சு.பாக்கியநாதன்



## பாரங்கள் இலகுவானவை

சேவியர்

## காதல்

பாடப் புத்தகத்தின் சிலபஸ் உலகெங்கும் ஒன்றே?

இதழ்: 346

31 ஆண்டுகளாக தமிழர் இல்லம் எங்கும் ஒலிக்கும் வெற்றிமணி






# காதல் பாடப்புத்தகத்தின் சிலபஸ் உலகெங்கும் ஒன்றே?

கொழும்பில் இருந்து பதுளை சென்ற புகையிரதம் அதன் எஞ்சின் மூச்சு வாங்கினாலும், அதில் பயணித்த பயணிகள் யாவரும் உல்லாசமாக காற்று வாங்கியவண்ணமே பயனித்தனர்.

இதில் சொகுசுபெட்டியில் இருந்தவர்கள் தான் அதிகமாக மலைக்காற்றை சுவாசிக்க ஆர்வமாக இருந்தனர்.

பல வெளிநாட்டுச் சுற்றுலா பயணிகளும் தமது நாடு சென்றதும் இஞ்சினினுக்கு வாங்கிய மூச்சுபோல் அவர்களுக்கும், வாங்கு வாங்கு என்று வாங்கும்.


● மாதவி

காரணம் பணம் மரத்தில் காய்ப்பதில்லையே. எந்த ஒரு வேலை என்றாலும் உழைப்பு இன்றி காசு வராது.

எனது புகையிரத பெட்டி எம்மை இழுக்கும் இஞ்சினை விட மிகவும் இளமையானது. அல்லது புத்துயிரூட்டப்பட்டது.

இன்னும் சொல்லப்போனால் காதல் வாகனம் என்று சொல்லலாம். சில சோடிகள் இருக்கையில் இருந்தபடி உண்ணவோ, பேசவோ விருப்பமின்றி ஒருவர் இதழை ஒருவர் ஒட்ட மூடிக்கொண்டனர்.

நான் என்னை மறந்து இயற்கையை இரசித்த வண்ணம் அங்கே விழும் நீர்வீழ்ச்சிகளை படம் எடுத்தவண்ணம் இருந்தேன்.

“அன்று வந்ததும் இதே நிலா இன்று வந்ததும் அதே நிலா. இருவர்கண்ணுக்கும் ஒரே நிலா.“

என்னை பெற்றவர்கள் வரை அந்த நிலவைப் பார்த்தது போலவே இந்த நீர்வீழ்ச்சிகளையும் பார்த்து இரசித்திருப்பார்கள். நீர்வீழ்ச்சி அதில் பாயும் நீர் என்றுமே ஒன்று அல்ல, ஒவ்வொரு கணமும் புதியதுகள்கள்.

அதனால் நீர்வீழ்ச்சிக்கு வயது என்றும் போகாது இளமையாகவே இருக்கும். அதனால் அருவிகளை நீர்வீழ்ச்சிகளை. பார்ப்பவர்கள் எல்லாம் இளமையாக இருப்பார்கள் என்பார்கள்.

இரண்டு யோடிகள் இருக்கையில் இருக்காது, நீர்வீழ்ச்சி பார்ப்பதால் இளமை நிலைக்கும் என்று, நின்ற நிலையில் நீர்வீழ்ச்சியில் மன தாரத் தோய்ந்தபடி நின்றார்கள். புகையிரத பெட்டியின் வாசலில் ஒருவரை ஒருவர் கட்டிப்பிடித்த வண்ணம் இருந்தார்கள். அழகான பெரிய நீர்வீழ்ச்சியைக் கண்டதும், செல்ஃபி எடுக்க முற்பட்டார்கள்.

04 ஆம் பக்கம் பார்க்க...



வெற்றிமணி

தமிழ் எங்கள் உயிருக்கு மேல்

ஓசை : 346



ஆரம்பம்: 1950

ஸ்தாபகர்
அமரர் மு.க.சுப்பிரமணியம்
( முன்னாள் அதிபர்:
குரும்பசிட்டி பொன். பரமானந்தர் வித்தியாலயம்)

பிரதம ஆசிரியர்
'ஓவியக்கலைவேள்'
மு.க.சு.சிவகுமாரன்
Chief Editor:
M.K.S.Sivakumaran B.F.A

Tel: +49 01631992333
+49 01631992333

e-mail: vettimaniy@hotmail.com

"வெற்றிமணிமொழி"
தோல்வியைக் கண்டு அஞ்சுபவர்களிடமிருந்து வெற்றி தானாகவே விலகிச்செல்கிறது

Vettimaniy Ltd
Company No: 8876276


# செம்மணி மனிதப் புதைகுழி இன அழிப்பின் அடையாளம்

கொழும்பிலிருந்து...
என்.அசோக்

ஈழத்தமிழருடைய போராட்ட வரலாறு என்பது பெரும் கொடூரமானது. தேசத்தின் விடுதலை போராட்டத்தில் பல இலட்சம் மக்கள் கொல்லப்பட்டிருக்கிறார்கள் பல இலட்சம் மக்கள் காணாமல் ஆக்கப்பட்டிருக்கிறார்கள்.ஒரு இனத்தை ஒட்டுமொத்தமாக அழித்தொழிக்கும் ஒரு யுத்தத்தையே இலங்கையை ஆண்ட அரசுகள் எடுத்திருந்தது என்பதற்கு பல சான்றுகள் – வரலாறுகள் இருக்கின்றன. ஒரு இனம் காலாகாலமாக தான் பிறந்து வளர்ந்த மண்ணுக்காக ஒரு தேசமாக நின்று போராடுகிறதன் அர்த்தத்தை அல்லது அதற்கு பின்னால் இருந்த வரலாற்று பின்னணியை இதுவரை எந்தவொரு சர்வதேச சமூகமும் உணர்ந்ததாகவோ அல்லது அதனை புரிந்துகொள்வதற்கோ முன்வந்ததாக தெரியவில்லை. அதன் காரணத்தினால் தான் முள்ளிவாய்க்கால் என்ற பேரவலம் நிகழ்ந்து 16 வருடங்கள் கடந்தும் அந்த போரில் நிகழ்த்தப்பட்ட மனித உரிமை மீறல்களுக்கு கூட ஒரு நீதியை ஈழத்தமிழர்களால் பெற்றுக்கொள்ளமுடியவில்லை. சாட்சிகள் –ஆதாரங்கள் பல இருந்தும் ஈழத்தமிழர்கள் நீதிக்காக தொடர்ந்தும் காத்திருக்கவேண்டிய ஒரு சூழலிலேயே இருந்துவருகிறார்.அந்த அடிப்படையில்,தமிழர் தேசத்தில் பல்வேறு மனித உரிமை மீறல்கள்–மனித குலத்துக்கு எதிரான கொடூரங்கள் நடந்ததற்கான சாட்சியங்கள் இன்றும் கொட்டிக்கிடக்கின்றன. அதில் ஒன்றுதான் செம்மணி புதைகுழி.

யாழ்ப்பாணம் – செம்மணியில் சிறியவர்கள் முதல் பெரியவர்கள் வரை கொடூரமாக அடித்து கொடுமைப்படுத்தப்பட்டு ஆடைளின்றி கொத்துக் கொத்தாக படுகொலை செய்யப்பட்டு புதைக்கப்பட்டுள்ள விவகாரம் தற்சமயம் பேசுபொருளாக மாறியிருக்கிறது. செம்மணி விவகாரம் பேசப்படுவது இது முதல்முறையல்ல. செம்மணி என்பது ஈழத்தமிழ் மக்களின் இதயங்களை நொருக்கியெடுத்த ஒரு பிரதேசமாகும்.1990 களின் இறுதிப்பகுதியில் இருந்து செம்மணி என்ற பெயர் தமிழர்களை நிலைகுலைய செய்த ஒரு அடையாளமாக இருந்திருக்கிறது.அந்த அடிப்படையில் தான் மீண்டும் செம்மணி விவகாரம் தற்சமயம் தமிழர் தேசத்தை கொதிப்படைய வைத்திருக்கிறது. அண்மையில் ஆரம்பிக்கப்பட்ட செம்மணி புதைகுழி தோண்டலின் போது புதைகுழியிலிருந்து இதுவரை 19 முழுமையான மனித எலும்புகள் அடையாளம் காணப்பட்டுள்ளன.தோண்ட தோண்ட மனித எச்சங்கள் வெளியே வருவ தால் அங்கு இன்னும் பல ஆயிரக்கணக்கான மனித எச்சங்கள் கிடைக்கப்பெறலாம் என்ற சூழலில் 20 ஆம் திகதி முதல் தொடர்ச்சியாக 45 நாட்களுக்கு அகழ்வு பணிகள் முன்னெடுக்கப்படுவதற்கான உத்தரவை நீதிமன்றம் வழங்கியிருக்கிறது.



இதுவரை செம்மணியில் அடையாளம் காணப்பட்டுள்ள 19 எலும்புக்கூடுகளை வைத்துப் பார்க்கும்போது அவை அனைத்தும் சிறுவர்கள், பெண்களுடைய எச்சங்கள் என்றும் கண்டெடுக்கப்பட்டிருக்கும் மனித எலும்புக்கூடுகளை வைத்துப்பார்க்கும் பொழுது இவர்கள் அனைவரும் அடி த்து கொல்லப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகம் வலுவடைந்திருக்கும் அதேவேளை, எலும்புக் கூடுகளில் ஆடைகள் அணிந்திருந்தமைக்கான எந்த சான்றுகளும் இல்லை என்றும் கூறப்படுகின்றது.எனவே இங்கு புதைக்கப்பட்டிருக்கும் உடலங்கள் திட்டமிட்ட வகையில் படுகொலைகள் செய்யப்பட்ட பின்னர் புதைக்கப்பட்டிருப்பதாக தகவல்கள் வெளியாகியிருக்கின்றன.

செம்மணி மனிதப் புதைகுழி விவகாரம் 1990 களின் இறுதி காலப்பகுதியில் அடையாளம் காணப்பட்ட காலத்திலிருந்து அதனுடைய உண்மைத்தன்மையை வெளிக்கொண்டுவருவதற்கு இலங்கை அரசுகள் எந்த முயற்சியையும் எடுத்திருக்கவில்லை.அதனை மூடிமறைப்பதற்கான காரியங்களே மேற்கொள்ளப்பட்டு வந்திருக்கிறது.1996 ஆம் ஆண்டு இலங்கை இராணுவத்தால் யாழ்.குடாநாடு கைப்பற்றப்பட்ட நேரத்தில் 600 பேர் காணாமல் போயுள்ளதாக 1997- நவம்பரில் சர்வதேச மன்னிப்புச் சபை அறிவித்திருந்தது. 1996 செப்டெம்பரில் செல்வி கிருஷாந்தி குமாரசாமி என்ற பாடசாலை மாணவி இராணுவத்தால் கூட்டு வன்புணர்வுக்கு உட்பட்டு படுகொலை செய்யப்பட்டதுடன், கிருஷாந்தியை தேடிச் சென்ற அவரது உறவினர்களையும் படுகொலை செய்து புதைத்த சம்பவத்துடன் செம்மணி விவகாரம் ஆரம்பமானது.

அதற்கமைய நீதிமன்றத்தினால் கிருஷாந்தி படுகொலையில் மரண தண்டனை விதிக்கப்பட்ட ஐந்து இராணுவத்தினர்களில் ஒருவரான சோமரத்ன ராஜபக்ஷ செம்மணியை மனித புதைகுழியின் ஆதாரமாக 1998 ஆம் ஆண்டு தனது ஒப்புதல் வாக்குமூலத்தில் வெளிப்படுத்தியிருந்தார். சோமரத்ன ராஜபக்ஷவின் ஒப்பு தல் வாக்குமூலத்தில், 'மேலதிகாரிக ளால் இரவில் அனுப்பப்படும் உடல்கள் செம்மணியில் புதைக்கப்படுவதுண்டு என்றும் முன்னூறு முதல் நானூறு

29 ஆம் பக்கம் பார்க்க...






# மலைக்க வைத்த மலையகம்



## மலைத்தேன் : 03

சுதர்சனின் அப்பா அம்மா தங்கை.

மீள ஆயாலாந்தானே. என் மனதிற்குள் சொல்லிக் கொண்டேன்.

பிற்போடப்பட்ட எந்த நடவடிக்கையும் பிற்போடப்பட்டதுதான் என்பதை உணர்கிறேன். மனசு அங்காலாய்த்துக் கொண்டேயிருக்கிறது.

கொஞ்சம் இந்த அருவியில் குளித்துச் செல்வோம் என்கிறேன். சிற்றருவி...குளிர் தானெனினும் என்னுடலும் உள்ளமும் ஒரு வகையாகச் சூடேறுகிறது.

சித்தர் பலர் உடற் சூடு தணிக்க அருவியிற் குளிப்பார்களாம். நானோர் சித்தனாகிறேன். ஒவ்வோர் அருவிக்கும் கதையுண்டு. கதை கேட்ட பரம்பரை தமிழ்ப் பரம்பரை. எங்கோ உருவாகி எங்கோ வளிந்து எங்கோ வேரூன்றி..



போகுமிம் மலைவாழ் மக்களை.. நினைக்கிறேன். முகநூல் வழி என்னிடம் பாடங்கேட்ட ...மேலும் சில மாணாக்கர்களைத் தேடிச் செல்கிறேன். சுதர்சனிடம் போகிறேன்.

இலங்கையின் அதிகூடிய குளிர் பிரதேசம் கந்தப்பொல. அங்குநான் போகிறேன். போகும் வழியில் ராவணன் மையல் கொண்டு மாற்றான் மனைவியைக் கவர்ந்து சிறை வைத்த அசோகவனமும் பார்க்கிறேன்.



க.ஆதவன்

முன்பும் பல தடவை பார்த்திருக்கிறேன். சீதாவையுங் கண்டிலேன். உள்ளங் கவர் ராவணனையுங் கண்டிலேன்.

கோயிலைக் கூட்டி நீர் தெளித்து.. துப்புரவுத் தொழிலாளிப் பெண்ணொருத்தியுடன் பேச்சுக்குடுத்தேன்.

ஒரு நாளைக்கு 250 ரூபவா என்றாள்.

நெஞ்சு வேகிற்று. கண்டேன் சீதையை என அனுமான் சொன்ன இடமா இது..?

மேலுமென்நெஞ்சுகவலையுள் ஆனது.

கடந்து போகிறேன். குளிர் தின்று கொண்டிருந்தது உடலை. சேர் அங்குள்ள குளிர் வேறு, இங்குள்ள குளிர் வேறு என்றவாறே தன் சுவற்றரை ஈந்தான் சுதர்சன். ■

---

03 ஆம் பக்கத் தொடர்ச்சி...

## காதல் பாடப்புத்தகத்தின்

இருவரும் என்னை பார்த்தபடி இரு கைகளும், வாசல் கதவில் ஒரு கை பிடியைப் பிடித்தபடி , ஒருகையை ஆணின் தோளில் போட்டபடி செல்ஃபி எடுத்தார்கள்.

அவர்களில் இருவரில் ஒருவர் வடிவாக

வராவிட்டால் அந்தப்படம் அழிக்கப் படும். இப்படி அழித்து அழித்து படம் எடுத்த வண்ணம் இருந்தார்கள்.

இதைப் பார்த்த நான்கேட்டேன்

“ எடுத்து விடவா“ என்று.

நான் எடுத்து விடவா என்றதும் மகிழ்ச்சியுடன் என்னிடம் தந்தார்கள்.

ஒரு கைக்குள் இருந்த ஆசை நான்கு கைக்குள் வந்தால் என்ன எல்லாம் நடக்குமோ அத்தனையும் நடந்தது.

புதுமணத்தம்பதிகளாக போத்துக்கல் நாட்டில் இருந்து இலங்கை வந்துள்ளார்கள்.

இது அறிந்ததும் போத்துக்கீசர் எமது நாட்டை ஆண்டவர்கள் என்றேன்.

அவர்கள் குசினி, யன்னல் என்றார்கள். இவை போத்துகீசரிடம் இருந்து எம்மிடம் தொற்றியவை.

அவர்கள் ஒரு நாட்டுக்கு போவது என்றால் அந்த நாட்டின் சரித்திரம் ஒருளவு அறிந்தே வருவார்கள்.

அதனால் அவர்கள் அந்த நாட்டில் பார்க்க வேண்டிய இடங்கள், பார்வையிட வசதியாக இருக்கும்.

இப்போது நான் எடுத்துவிட்ட படங்களை பார்த்து அழகாக எடுத்துள்ளீர்கள் என்றனர்.

உங்கள் வயசு என்ன என்று அறியலாமா, என்று கேட்டனர். நான் உங்களுக்கு கேட்காமல் அவர்களுக்கு மட்டும் கேட்கும்படி சொன்னேன்.

என் வயதைக் கேட்டவர்களிடம் நானும் உரிமையுடன் கேட்டேன்.

இலங்கையில் புகையிரதம் ஓடும்போது ஊஞ்சல் ஆடும். நிற்பதே கஸ்ட்டம்.

நீங்கள் “ஓடும் ரெயிலில் வாசலில் நின்று ஒற்றைகையில் பிடித்தபடி இருவரும் செல்ஃபி எடுக்கிறீர்கள் விழுந்தால் அவ்வளவுதான்“ என்றேன்.

சட்டென அவளும் அவனும் சொல்லி வைத்தாற்போல் சொன்ன பதில் “இரண்டு கையும் பிடியை விட்டால் மற்றக்கை இரண்டும் பிடித்தபடி நாம் இருவரும் தானே வீழ்வோம் போவோம் என்றனர்.

காதல் சிலபஸ் உலகெங்கிலும் ஒன்றுதான் என எண்ணவைத்தது.

நான் அப்போ பிள்ளைகள் இருந்தால்

என்றேன்.

அவள் “அப்போது என்றால் முடிவு மாறியிருக்கும் என்றாள்.“

என் தூண்டிலுல் மீன் சிக்கியது.

அப்போ உங்கள் இருவரது அம்மா அப்பாவுக்கும் நீங்கள் பிள்ளைகள் தானே என்றேன்.

“Sorry“ என்றார்கள்.

My god என்றார்கள்

நாம் கதைத்த நேரம் வெறும் ஐந்து நிமி டங்கள்தான். ஆனால் மனதோடு பல மணிநேரம் வாழ்ந்துபோகிறார்கள்.





விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.



# காலம் கடந்த

கே.தனீஷா
(கலஹா)

கடந்த காலம் பற்றிய நினைவு மனிதனை அறிவாளி ஆக்குவதில்லை . வருங்காலம் பற்றிய பொறுப்புணர்ச்சியே அறிவாளிக்கு அடையாளம் .

தடம் பதிக்க முயன்றும் அதற்கு இடம் கிடைக்காமல் வாழும் மலையக மண்ணின் 200 ஆண்டுகள் கடந்த காலம் பற்றி உச்சிகுளிர்வதா அல்லது யாதும் நடக்காது கடந்து வந்த காலம் பயனற்றதாகவே இருப்பதை நினைத்து மனதில் அவலம் கொள்வதா என்ற எண்ணம் மக்கள் மனதில் எழுந்தாலும் குடத்தினுள் எரியும் விளக்கை போல வெளிப்படாமல் வெறும் என்னமாகவே காணப்படுவது சத்தியமே .

மலை கடந்து , காடு கடந்து , கடல் கடந்து மலையகத்தில் பாதம் பதித்து 200 ஆண்டானது கடந்தாலும் மக்களின் நிலையானது குன்று குழியிலேயே கொட்டி கிடக்கிறது. மக்களை வைத்து அரசியல் உருவாக்கும் சுயநலவாதிகள் அதே மக்களின் அக அவலத்தை சற்றும் நோக்குவதில்லை.



இந்த மலையக மக்கள் செய்த பாவமென்ன? ஏன் அவர்களுக்கு மட்டும் இவ்வளவு துன்பம்? அவர்களுக்கு மட்டும் ஏன் ஒரு முன்னேற்ற வழியை உருவாக்குவதில்லை? முதல் பாதம் பதித்தவன் எவ்வாறு இருந்தானோ அதேப் போன்றுதான் நாளை பாதம் பதிக்க காத்திருப்பவனது நிலையும் காணப்படும் என்ற அச்சம் மலையக மண்ணின் மக்களுக்கு நிச்சயம் இருக்கும்.

யாருமே கால் தடம் வைத்து நடக்க இயலாத போக்குவரத்து பாதை , பிரசவ வலியில் துடித்து கொண்டிருக்கும் தாயின் குழந்தை பாதி வழியிலேயே பிறக்கும் நிலை, நிம்மதியாக அமர்ந்து உண்ண முடியாத அளவில் காணப்படும் நிலத்தின் ஓட்டைகள் , நிதம் நிதம் உழைத்து உண்ணும் கூலி வேலைக்கு கூட சம்பளம் கிடைக்காத நிலை, பெற்ற பிள்ளைகளின் அடிப்படை தேவைகளை கூட நிறைவேற்ற முடியாத அளவில் வாட்டும் வருமை , செலவிற்கு தேவையான பணத்தை அன்று அன்று கூலி வேலை செய்து நிறைவேற்றும் நிலையில் வரவை மீறிய செலவை தரும் பொருளாதார பிரச்சினை, மூன்று நேர உணவானது ஒரு நேர உணவு வேளையாக மாறிய அளவிலான நட்ட உழைப்பு, உணவை கொடுப்பவனுக்கே நாவிற்கு சுவையாக உண்ண முடியாத நிலை , தங்கள் பிள்ளைகள் வைத்தியர், ஆசிரியர், போன்றவர்களாக ஆக வேண்டுமென்று கனவு கண்டு கொண்டிருப்பவர்களின் கனவானது கனவாகவே இருக்கும் நிலை போன்ற பல இன்னல்கள் இருப்பினும் இரவென்ற ஒன்றிற்கு விடிவென்றொன்று உள்ளதைப் போன்று போராட்டம் ஒவ்வொன்றிற்கும் வெற்றிகள் உண்டு என்ற எண்ணக்கருவினை மனதில் பதித்து தன்னம்பிக்கையோடு போராடுகின்றனர்.

நிஜமாகவே திறமை காணப்படதான் செய்கிறது ஆனால் சாதனை படைக்க முயலும் போது மற்றவர்களால் முடக்கப்படுகின்றனர். ஒவ்வொரு துன்பத்திற்கு பின்பும் கண்டிப்பாக ஏதோ ஒரு மகிழ்ச்சியை ஒளிந்து வைத்திருக்கும் காலம். இவ்வளவு ஆண்டுகள் கடந்த பின்பாவது அம்மகிழ்ச்சி வெளிச்சம் காணுமா?

இவ்வாறு மக்கள் போராடி போராடி அவர்களின் பிணங்களின் மீதேதான் ஏறி நிற்கும் நிலை மலையக மண்ணின் மக்கள் நிலை. இத்தனை வருடங்கள் கடந்தாவது இம்மக்களுக்கான நியாய பூர்வமான மனநிம்மதி கிடைக்குமா? என்பதே மலையக மண்ணால் காலத்திற்கு கேட்கக்கூடிய கேள்வி?

**மலையக மண் மக்கள் சாதிக்க பிறந்தவர்கள் மட்டுமே!**



# குடையாக இருங்கள்

வெளிநாடுகளில் இருந்து இலங்கை செல்பவர்கள், அப்பிளும், இனிப்பும், கொண்டு சென்று உறவினர்களுக்கு கொடுப்பார்கள்.

எல்லோர் மனதிலும் இலங்கை என்றால் வெய்யில் நிறைந்த நாடு என்ற நினைப்பே நிறைந்து இருக்கும்.

ஆனால் “எந்தப்பளைக்கு போனாலும் கந்தப்பளைக்கு போகாதே” என்பார்கள்.

அப்படிக்குளிரும் மழையும் உள்ள இடம் மலையகம்.

எனவே விடுமுறைக்கு இலங்கை வருபோது அவர்களுக்கு குடையாக இருங்கள்.





SRI LANKA
12 ADULTS
13 NIGHTS 14 DAYS TOUR PACKAGE
WITHOUT FLIGHT TICKET
1349 €
15 SEPTEMBER START
1.Colombo Fairway Colombo
2. Sigiriya Sigiriya Village
3.Sigiriya Sigiriya Village
4. Kandy Mount Randholee
5. Ella/ Haputale Morning Dew or similar
6. Ella/ Haputale Morning Dew or similar
7.Yala Chaarya resort & spa
8. Yala Chaarya resort & spa
9.Bentota The Palms
10. Bentota The Palms
11. Bentota The Palms
12. Bentota The Palms
13. Bentota The Palms
14. 14 Departure
0234 2399032 | 0179 14 84892
INFO@LUCKY-FLY.DE | WWW.LUCKY-FLY.DE
Alleestr.38-40a im
Edeka- Center
44793 Bochum
Tel: 0234-2399032
Luckyfly



# மகள்களின் வாழ்கையை கெடுக்கும் அளவுக்கு அம்மாக்கள் மாறுகிறார்களா?

black & white காலம் முதல் இன்றைய AI டிஜிட்டல் யுகம்வரையிலும் கணவன் மனைவி பிரச்சனைகள் வெவ்வேறு விதமாக மாறிவந்திருக்கிறது என்பதுடன் பிரச்சினைக்குறிய காரணங்களும் காரண கர்த்தாக்களும்கூட மாறியிருக்கின்றதெனலாம்.

திருமணமான பெண்களுக்கு கணவனைப் பெற்ற அம்மாவால்தான் ( மாமியாரால்தான்) பிரச்சினை என்றதெல்லாம் “விசு“ கால திரைப்படங்களோடு முடிவுற்றவை என்றுகூறினாலும் தகும். ஏனெனில் தற்போதெல்லாம் ஆண்களை பெற்ற அம்மாக்கள் புரிந்துணர்வுடன் நிறையவே மாறியிருக்கிறார்கள், விட்டுக் கொடுக்கிறார்கள் என்று கூறும் அளவிற்கும் , திருமண வாழ்க்கையில் பிரச்சனை ஏற்படுவதற்கு பிரதான காரணியாக பெண்ணின் அம்மாக்கள் மாறி வருகின்றனர் என்றும் அனுபவ ரீதியாக பலராலும் கூறப்பட்டு வருகின்றதென்றால் மிகையில்லை. தன்னுடைய சொந்த மகள்களின் வாழ்கையை கெடுக்கும் அளவுக்கு அம்மாக்கள் மாறுகிறார்களா?

கணவன் மனைவிடையே கருத்து வேறுபாடுகள் இருப்பது இயல்பானது. ‘என்ன நடந்தாலும் விட்டுக்கொடுத்து அட்ஜெஸ்ட் பண்ணி வாழ பழகிக்கொள்‘ என்று மகளுக்கு புத்திமதி சொல்லிய அம்மாக்கள் இன்றோ , ‘ அட்ஜெஸ்ட் பண்ணிபோகணும்னு எல்லாம் தலையெழுத்தேயில்லை , அப்படி மட்டும் செய்து பழக்கிவிடாதே ‘ என்று கூறும் அம்மாக்களாக மாறி கணவனைக் கைக்குள் போட்டுக்கொள்ள வேண்டும், இதைச் செய்ய விடாதே, இப்படி நடந்து கொள் என்று கூறி மகளின் மனதினை கொஞ்சம் கொஞ்சமாக விஷமாக்குகிறார்கள் என்பது மறுப்பதற்கில்லை .

ஏதேனும் பிரச்சனை என்று வந்தால், மகளிடம் பக்குவமாகக் கூறி சமாதானம் செய்து அனுப்புவதே நல்ல தாய்களுக்கு அழகு . ஆனால், இவர்கள் அதில் பெட்ரோல் ஊற்றி விடுகிறார்கள். (விதிவிலக்குகள் இதில் வராது) திருமணமாகிய முதல் இரண்டு மூன்று வருடங்கள் பல தம்பதிகளுக்கு நரகமாக கூட அந்த திருமணவாழ்க்கை நினைக்கத்தோன்றலாம் . ஏனெனில் அவரவர் வளர்ப்பு , வாழ்க்கை முறை , தனிப்பட்ட விருப்பு வெறுப்புக்கள் மோதி வெடித்து சிதறும் காலகட்டமும் , புரிந்துணர்வில்லாத மனோபாவம் தலைதூக்குவதும் இந்த காலகட்டத்தில்தான்.



நம்மில் எத்தனைபேருக்கு இந்த காலப்பகுதிக்குள் விவாகரத்து செய்துவிடலாம் என்று தோன்றியிருக்கும் ? ஆனால், கால மாற்றத்தில் நாம் நினைத்தது எவ்வளவு முட்டாள் தனமானது என்று புரியும். ஏனெனில் இந்த மூன்று வருடங்களை கடந்துவிட்டால் நிச்சயமாக ஓர் புரிந்துணர்வு அத்தம்பதிகளுக்குள் ஏற்பட நிறையவே வாய்ப்பிருக்கும். ஆனால் துரதிஷ்டவசமாக அதற்குள்ளாகவே அவர்க்கள் பிரிந்துபோய்விடுவதுண்டு. இந்த பிரிவுக்கு காரணமாக பல விடயங்கள் இருக்கின்றபோதிலும், பெண்ணின் அம்மாக்களின் தவறான வழிகாட்டுதலும் ஓர் காரணமாக அமைந்துவிடுவதுதான் ஆச்சர்யம் ! ஏதேனும் பிரச்சினையோடு வரும் மகளிடம் “இவன் உனக்கு சரிப்பட மாட்டான் , விட்டுவிட்டு வந்துவிடு , நீ சம்பாதிக்கிறாய், உன்னால் சமாளிக்க முடியும் “ என்று மகளின் மனதைக் குழப்பி விவாகரத்துக்கு அழைத்துச் சென்று விடுகிறார்கள் இந்த அம்மாக்கள் .



பிரியா இராமநாதன்
(இலங்கை)

தன் நல்லதுக்குத் தானே தன்னைப்பெற்ற அம்மா சொல்கிறாள் என மகளும், தன் வாழ்கையைத் தொலைத்துவிட்டு பல காலங்களுக்கு பிறகே தான் செய்தது தவறு என்று உணர்கிறார்கள். ஆனால், அப்போது காலம் கடந்துவிடும். இதில் இந்த மகள்களுக்கு சுய புத்தி என்கிற ஒன்று இருந்தால் மட்டுமே அவளால் தன்னுடைய குடும்பத்தையும் , தான் சார்ந்த உறவுகளையும் அனுசரித்து நடந்து கொள்ள முடியும் .

பல பெண்களைப்பெற்ற தாயார்கள் திருமணமான தன்னுடைய பெண்ணின் குடும்ப வாழ்வில் பல முடிவுகளை தன் மகள்களைக்கொண்டு தாமே எடுக்கிறார்கள் என்றால் மிகையாகாது . திருமணத்திற்கு முன்புவரை தன்னுடைய கையை பிடித்துக்கொண்டு தன்னை தோழியாக நடந்து கொண்டிருந்த மகள் , எந்த உடை வாங்குவது , எங்கே செல்வது , என எல்லாவற்றிலுமே தன்னுடைய கருத்தைக் கேட்டுக்கேட்டு நடந்துகொண்ட மகள் , மாதம் முடிய சம்பள பணத்தை தன் கையில் கொடுத்த மகள் திடீரென இன்னொருவருடைய (அதாவது அவளுடைய கணவனின் ) வாழ்வோடு இணைந்து வாழ தலைப்படும்போது அதை ஏற்றுக்கொள்ள பல அம்மாக்கள் இங்கு தயாராக இருப்பதில்லை . ஏன் , தன் சொந்த அம்மாவின் தலையீடுகளால் தன்னுடைய சொந்த வாழ்க்கையிலேயே எந்த முடிவுகளையும் எடுக்கக்கூடிய நிலையில் அல்லது அந்த இடத்தில் இல்லாமல் போவது குறித்த பெண்களுக்கே பல நேரத்தில் எரிச்சலை உண்டுபண்ணிவிடுமென்றால், அவளது கணவரின் நிலை ??? !!!. இப்படி , அனைத்தையும் நானே நிர்வகிக்க வேண்டும் நான் சொல்வதைத் தான் அனைவரும் கேட்க வேண்டும் என்ற ஒரு

28 ஆம் பக்கம் பார்க்க...






விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.



**சும்மா பகிடி பகிடியா எழுதினது.. சீரியஸாக எடுத்து குத்தி முறியாமல் பம்பலகாவே வாசித்து விட்டுப் போகவும்..**



# விளக்குமாறும் தும்புத்தடியும்

யாழ்ப்பாணத்தில் உச்சி வெய்யில் மண்டையை பிளந்து கொண்டிருந்தது. கொஞ்ச காலமாக வீசிக் கொண்டிருக்கும் சோளக் காற்று ஊர்ப்புழுதியை எல்லாம் வீட்டுக்குள் அள்ளிக் கொண்டு வந்து சேர்த்திருந்தது.

“எத்தன தரமடாப்பா கூட்டுறது.. கூட்டக் கூட்ட புழுதி வந்து சேர்ந்து கொண்டே இருக்கு“ வீட்டின் மூலையில் சாத்தி வைத்திருந்த தும்புத்தடியார் காலங்காத்தாலேயே அலுத்துக் கொள்ளத் தொடங்கினார்.

“என்ன இருந்தாலும்.. எங்கட வீடெல்லோ.. நாங்க தானே துப்புரவா வச்சிருக்கோணும்.. அதுவும் நீர் தானே தும்புத்தடி.. கூட்டிப் பெருக்கித் துப்புரவாக வைத்திருக்கிறது தானே உமக்கு விதிக்கப்பட்ட விதி“ தும்புத்தடி இருந்த மூலைக்கு பக்கத்து மூலையில் சாத்தி வைக்கப்பட்டிருந்த, வேலையி?ல்லாமல் விடுப்புப் பார்த்துக் கொண்டிருக்கும், உலக்கையார் சோம்பல் முறித்துக் கொண்டார்.

“ஓமடாப்பா நீ சொல்லுறதும் சரி தான்“ தும்புத்தடியார் பழைய குருடி கதவை திறடி கதையாட்டம் தனக்கு விதிக்கப்பட்ட வீட்டைத் துப்புரவாக்கும் வேலையை தொடங்குவம் என்று ஆயத்தமாகவும், அடிவளவுக்க குய்யோ முய்யோ என்று பெரும் ஆரவாரம் கேட்கவும் சரியாக இருந்தது.

“என்னடாப்பா ஏதடாப்பா சத்தம்.. தேர் தல் தானே முடிஞ்சிட்டுது“ என்று கொண்டே உலக்கையாரும் தும்புத்தடியாரும் யன்னல் சீலையை விலக்கி வெளியே பார்த்தால், பட்டுக் குஞ்சம் கட்டின விளக்குமாத்தார் “டேய் விடுங்கடா என்னை.. டேய் விடுங்கடா என்னை“ என்று கத்திக் கொண்டு அடிவளவுக்க ஓடித்திரியிறார்.

“என்னடாப்டா இது காலங்காத் தால விளக்குமாத்தார் கத்து கத்தென்று கத்துறார்.. உவர் விளக்குமாத்துக்கு என்னவாம் பிரச்சினை“ உலக்கையார் தும்புத்தடியாரிடம் குசுகுசுத்தார்.

“ஆ”விளக்குமாத்தை வீட்டுக்க விடட்டாம்.. தான் வீட்டையும் வளவையும் ஊரையும் உலகத்தையும் எல்லாத்தை- தயும் நிமித்திக் காட்டுவாராம்“ தும்புத்தடியாரும் உலக்கையாருக்கு மெதுவாகவே பறைஞ்சார்.

“ஏன்டாப்பா உவன் விளக்குமாத் தார் தானே விடுங்கோ என்னை.. நான் வளவை வடிவா துப்புரவாக்கிறன் என்று எல்லோ வீட்டை விட்டு போனவன்.. இப்ப பார் வளவெல்லாம் இன்னும் குப்பையும் கஞ்சலுமா கிடக்கு“ உலக்கையாரின் பார்வை அலங்கோலமாக இருந்த அடிவளவைச் சுற்றி வந்தது.



**ஜூட் பிரகாஷ்**
**(அவுஸ்திரேலியா)**

“ஐசே தும்புத்தடி.. வெளியே வாரும்.. ஏலுமென்றா வெளி யே வாரும்..“ விளக்குமாத்தார் கத்திக் கூப்பாடு போட்டுக் கொண்டிருக்க அவரோடு அலவாங்காரும் கோடாரியாரும் ஓடோடி வந்து விளக்குமாத்தாரோடு ஒட்டிக் கொண்டனர்.

“எடேய்.. போன மாதம் தானேடா வீட்டுக்க இருந்த மங்கிப் போன கோடாரியையும் அலவாங்கையும் தூக்கி அடிவளவுக்க வீசினவங்க.. பார் உவயல.. இப்ப குஞ்சம் கட்டின விளக்குமாத்தோட போய் விலாசமா நிற்கீனம்..“ உலக்கையார் கொடுப்புக்க சிரித்துக் கொண்டார்.

“ஓமோம்.. அங்க.. அங்க பாரும்.. புளியமரத்திற்கு பின்னால மம்பட்டியார் மறைஞ்சிருந்து விளக்குமாத்தாருக்கு விளக்கு பிடிக்கிறதை“ தும்புத்தடியாரும் குசும்பினார்.

“ஓ..ஓ.. ஓ..இப்பான் கவனிச்சனான்“ உலக்கையார் கலகலவென கெக்கட்டம் போட்டுச் சிரித்தார். “விளக்குமாத்தார் குஞ்சம் கட்டிக் கொண்டு கத்திப் போட்டுக் கிடக்கட்டும்.. இதைத்தானே காலங்காலமா செய்யுறார்“ உலக்கையார் தும்புத்தடியாரை திரும்பிப் பார்த்தார்.

“அடிவளவையே ஆமாணதாக துப்புரவாக்கத் தெரியாத பட்டுக் குஞ்சான் விளங்குமாறு வீட்டுப் படி ஏறி வந்து வீட்டைப் பெருக்கப் போகுதாம்.. கேட்கிறவன் கேணயன் என்றால் எலியும் ஹெலியை ஓட்டும் என்றுவாங்களாம்“ உலக்கையார் புறுபுறுத்தார்.

“எனக்கு தலைக்கு மேலே வேலை கிடக்கு.. நான் வீட்டைக் கூட்டிப் பெருக்கப் போறன்.. உவங்கட கூத்தைப் பார்த்துக் கொண்டிருந்தால் வீட்டு வேலை ஒன்றும் நடவாது“ தும்புத்தடியார் யன்னல் சீலையை இழுத்து மூடி விட்டு விறுவிறுவென வீட்டைப் பெருக்கத் தொடங்கினார்.

“ஓமடாப்பா நீ உன்ட வேலையை பார்.. உதுகள் தாங்களும் படுக்காதுகள் தள்ளியும் படுக்காதுகள்..“ உலக்கையார் தொடர்ந்தார். “வீட்டு படியில காலடி எடுத்து வச்சாங்களோ நானே ஒரு போடு போடுறன்..“உலக்கையார் விடுப்புப் பார்த்துக் கொண்டே நிலை எடுத்துக் கொண்டார்.





விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.



# முல்லைத்தீவில் நிறம்மாறும் பாறைகள்

இயற்கை அன்னையின் அரியபடைப்பான புலிபாய்ந்தகல் கடற்கரையின் அமைவும் அழகும் பார்ப்பவர்களை வியப்பில் ஆழ்த்துவதோடு சுற்றுலா பயணிகள் மனதில் அமைதியான நிலையை உருவாக்கும் தன்மை கொண்டதாக அமைந்துள்ளது.

கடலை சுற்றி நிறம் மாறும் கற்பாறைகளும், கடற்கரைகளில் பரந்து விரிந்திருக்கும் சிறு சிறு பச்சை தரைகளும், வித்தியாசமான வடிவிலான முருகை கற்பாறைகளும், கடலுக்கு அருகேயே பரந்த வனப்பகுதியும், மணல் தரையும் கொண்டு சிறு குடாவாக காட்சியளிக்கின்றது.

இது முல்லைத்தீவு மாவட்டத்தில் கரைதுறைப்பற்று பிரதேச செயலகத்திற்குட்பட்ட கொக்குளாய் வடக்கிற்கும், நாயாற்று பகுதிக்கும் இடைப்பட்டு 21ஆவது மைல்கல் அமைவிடத்திற்கு அருகே செல்லும் வீதியில் அமைவு பெற்றுள்ளது.

புலிபாய்ந்தகல் கடல் பகுதியில் அமைந்துள்ள சிவப்பு கற்பாறை ஒன்றில் புலி பாய்ந்த கால்தடம் பதிவாகி இருப்பதனாலேயே புலிபாய்ந்த கல் என பெயரிடப்பட்டிருப்பதும், குறித்த கடற்பகுதியில் கனிய வளங்கள் (இல்மனைற்) இருப்பதும் சிறப்பம்சமாகும்.

கடலின் மேற்பகுதியில் மலைநாட்டு இயற்கை தாவர அமைப்பும் , அருகாமை அடர்த்தியான வனமும் இருக்கின்றது.

சுற்றுலா பயணிகள் சிறு குடில் அமைத்து உணவு சமைத்து உண்ணக்கூடிய இட அமைவும், மகிழ்ச்சியான தருணங்களை இனிமையாக புகைப்படம் எடுத்து களிக்ககூடிய இடமாகவும், பார்பவர்கள் மனதிற்கு புத்துணர்ச்சி தர கூடிய அமைதியான இடமாகவும், சிறுவர்கள் விளையாடக் கூடிய சுத்தமான மணல் மேடுகளை கொண்டதாகவும், கனிய வளங்களை மணல் தரையில் காணக்கூடிய இடமாகவும் இருக்கின்றது. மிக ஆழமானதும் மிக பரந்த கடற்பகுதியாக இருக்கும் அதே நேரம், கடல் அலைகளின் தாக்கம் குறைவானதாகவும் இருக்கின்றது.

கடற்கரைகளில் இருக்கும் பாறைகளில் அலைபட்டு தெறிக்கும் போது சிவப்பு நிறமான பாறைகளின் நிறம் கபிலநிறமாக காட்சியளிக்கும் அற்புதமான காட்சி மிக அருமையானது.

கற்பாறைகளில் அலைமோதி தெறிக்கும் அழகையும், சூரியன் மறையும் காட்சியும், கடல் அலைகளுடன் அலை புரண்டு கரை சேரும் நண்டுகள் மணல்தரை கரைக்கு வரும் நண்டுகள் வரையும் சித்திரமும் மிக அற்புதமானது.

இயற்கை அழகை ஒரே நேரத்தில் பார்க்கவும், இரசிக்கும் வகையில் உள்நாட்டு, வெளிநாட்டு சுற்றுலா பயணிகளை ஈர்க்கும் வகையில் இலங்கையில் வடக்கு மாகாணத்தில் குறிப்பாக முல்லைத்தீவு மாவட்டத்தில் தரை, கடல், பாறைகள், வனம்,கனிய வளம் என அனைத்து இயற்கை படைப்புக்களையும் உள்ளடக்கிய சிறு குடாவாக அமைவு பெற்றிருப்பதே புலிபாய்ந்த கல் கடற்கரையின் சிறப்பம்சம்மாகும்.

# முப்படை வீரர்களுடன் போட்டியிட்டு யாழ். யுவதி தேசிய ரீதியாக சாதனை!



யாழ்ப்பாணம் – பொன்னாலை பகுதியை சேர்ந்த தமிழரசி ஜீவேஸ்வரன் என்ற யுவதி தேசிய ரீதியாக நடைபெற்ற 10 ஆயிரம் மீற்றர் வேகநடை போட்டியில் பங்குபற்றி, மூன்றாவது இடத்தை பெற்று வெண்கலப் பதக்கத்தை தன்வசப்படுத்தியுள்ளார்.

முப்படை வீரர்கள் மற்றும் ஏனைய போட்டியாளர்களுடன் போட்டியிட்டு அவர் மூன்றாவது இடத்தை பெற்று வெண்கலப் பதக்கத்தை தன்வசப்படுத்தியுள்ளார்.

குறித்த யுவதி கருத்து தெரிவிக்கையில்,

நான் இந்த ஆண்டு union national meet இல் 10 ஆயிரம் மீட்டர்கள் வேகநடை போட்டியில் மூன்றாமிடம் வந்து வெண்கலப் பதக்கத்தை பெற்றுள்ளேன். இதற்கு முன்னர் 2023ஆம் ஆண்டு பாடசாலை மட்ட ரீதியாக 5 ஆயிரம் மீட்டர்கள் வேகநடைப் போட்டியில் தங்கப்பதக்கம் பெற்றுள்ளேன். அதைவிட மாவட்ட மற்றும் மாகாண மட்ட போட்டிகளிலும் கலந்து கொண்டேன்.

நடைபெற்ற போட்டியில் முப்படை வீரர்களுடன் போட்டியிட்டே இந்த மூன்றாவது இடத்தை பெற்றுள்ளேன்.

எனது ஆரம்பகால பயிற்றுனராக சுபாஸ் ஆசிரியர் மற்றும் நிசாந்தன் அண்ணா, பிரதீஸ் அண்ணா ஆகியோர் காணப்படுகின்றனர். தற்போது யாழ்ப்பாணம் மாவட்ட விளையாட்டுத்துறை பொறுப்பாளர் விஜிதரன் ஆசிரியர் எனது பயிற்றுவிப்பாளராக காணப்படுகின்றார்.

நான் முன்னர் போட்டிகளில் வெற்றுக் கால்கள் மூலமாகவே போட்டியிட்டேன். பின்னர் நிதி அனுசரணையாளர்கள் மூலம் எனக்கு இந்த போட்டிக்கு தேவையான சப்பாத்து வாங்கி தரப்பட்டது. விக்டோரியா கழகம், குணா அண்ணா, மதி அண்ணா ஆகியோரே எனக்கு நிதி உதவிகளை வழங்குகின்றனர்.

கடந்த வருடம் நான் ஆசிய தெரிவுப் போட்டிக்கு சென்று முப்படையினருடன் போட்டியிட்டு 10 பேருக்குள் வந்தேன். அதில் பழிவாங்கும் முகமாக என்னை மைதானத்துக்குள் இறங்குவதற்கு விடாமல் செய்தார்கள். பின்னர் பயிற்றுவிப்பாளர் விஜிதரன் ஆசிரியரே கதைத்து என்னை போட்டியிட அனுமதி பெற்றுத் தந்தார். இருப்பினும் திட்டமிட்ட சதி போல பவுல் அடித்து நிறுத்திவிட்டார்கள்.

தமிழர் – சிங்களவர் என்ற பாகு பாட்டின் அடிப்படையிலேயே இவ்வாறு செய்வதாக நான் நினைக்கிறேன்.

இம்முறை பொட்டு எதுவும் நெற்றியில் வைக்காமல் ஒரு சிங்கள யுவதி போலவே சென்றேன். இந்தமுறை பவுல் அடிக்கவில்லை என்றார்.




விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.

# கதை சுப்பர்


கே.எஸ்.சுதாகர்
(அவுஸ்திரேலியா)

சமீபத்தில் வீட்டிற்கு வந்த கமலாக்கா, என்னுடைய சிறு கதைத்தொகுப்பு ஒன்றை வாங்கிச் சென்றார்.

“என்னுடைய அம்மா நிறையப் புத்தகங்கள் வாசிக்கிறா. உங்கட புத்தகத்தையும் ஒருக்காத் தாங்கோ. வாசிக்கக் குடுப்பம்.“

“அம்மாவுக்கு என்ன வயசாகின்றது?“

“எண்பத்தைஞ்சைத் தாண்டிவிட்டா“

“நல்லது. இந்த வயசிலையும் நல்ல சுறுசுறுப்பா இருக்கிறா. குடுங்கோ வாசிக் கட்டும்.“

சில வாரங்கள் கழிந்திருக்கும். கமலாக்கா எனது மனைவியுடன் தொலைபேசியில் உரையாடிக் கொண்டிருந்தார். திடீரென மனைவி தொலைபேசியை என்னிடம் நீட்டினார்.

“கமலாக் காவின்ரை அம்மா உங்களோடை கதைக்க வேணுமாம்.“

“தம்பீ உம்முடைய கதைப்புத்தகம் அற்புதம். முதலாவது கதையை ஏழெட்டுத்தரம் வாசிச்சுப் போட்டன்.“

என் மனதிற்குள் மட்டற்ற மகிழ்ச்சி. ஒரு கதையை ஒரு தடவை வாசிக்கவே பலரும் தயங்கும் இந்தக் காலத்தில் இப்படியொரு பெண்மணியா?



“ஏன் அம்மா அவ்வளவு நல்லாவா இருக்கு.“

“அப்பிடியில்லைத் தம்பி சுருட்டி வைச்ச பாயை விரிக்கிற மாதிரி இப்ப என்ரை நிலைமை இருக்கு“ எனக்கு அவர் சொன்னது ஒன்றும் புரியவில்லை. அவரே விளக்கம் தந்தார்.

“இல்லை தம்பி ஒரு பக்கமாக வாசிச்சுக்கொண்டு போக, மற்றப்பக்கமா மறந்து போகுது இன்னுமொரு நாலைஞ்சு தரத்திலை முடிச்சுப் போடுவன் தம்பி“

“அதுதான் நல்லது அம்மா... விடாமல் தொடர்ந்து வாசியுங்கோ“ என்று நான் அவரை உற்சாகமூட்டினேன்.

சில பேர் தலையணை சைசில் புத்தகம் போட்டு உறங்கக் கொடுக்கின்றார்கள். நான், ஒருவர் ஆயுள் உள்ளவரை



படிப்பதற்கு ஒரு புத்தகம் குடுத்திருக்கின்றேன்.

நீங்கள் நிறையப் புத்தகங்கள் படிப்பதாக உங்கள் மகள் சொன்னாரே இப்படித்தான் அந்தப் புத்தகங்களையும் படிக்கின்றீர்களா?‘ என்ற கேள்வி, தொலைபேசி என் மனைவியின் கைக்கு மாறியபின்னர் தான் என் மூளைக்குள் வந்தது. அவருக்கு எண்பத்தைஞ்சில் கிடைத்த பாய் விரிக்கும் தொழில், எனக்கு அறுபதில் கிடைத்திருக்கின்றது.

---

# ஓட்டை வீடும் பட்ட மரமும்





மாதவி (யேர்மனி)

மஸ்கேலியா நீர்வீழ்ச்சிக்கு அருகில் வாழும் ஒரு முதிய தம்பதிகள்.

தெருவோரம் சாய்ந்து இருக்கும் பட்ட மரத்தை விறகிற்கு பயன் படுத்த வெட்டி எடுக்கும் அரிய காட்சி.

பத்து நிமிடத்தில் கூறுபோடும் மரம் வெட்டும் இயந்திரம் அவர்களிடம் இல்லை.

அவர்களிடம் உள்ளது உரமான நெஞ்சும், ஒரு அலவாங்கும், ஒரு பிக்கானும் மட்டுமேதான்.

உடல் இழைத்தால் உற்சாகம் கொடுக்கவும், ஓய்வெடுக்கவும் , அறிவுறுத்த அருகே கட்டிய மனைவி.

ஒரு எண்பது வயதை தாண்டியவர்கள் அவர்கள். மரத்தை அவர்களால் குறுக்காக வெட்ட முடியாது, அதனால் ஆடு ஈய்ப்பதுபோல் பட்டை பட்டையாக உரித்து எடுக்கிறார்கள்.

அலவாங்கை அடித்து மரத்தில் ஒரு சிறு வெடிப்பை ஏற்படுத்தி, அதற்குள் பிக்கானை வைத்து தெண்டி மரத்தை உரிக்கிறார்.

உரிபட வில்லை என்றால், அந்த பிக்கானின் பிடியில் மேல் ஏறி துலா மிதிப்பது போல் அமுக்குகிறார்.





கையில் வாட்டர் பொட்டிலும், தோளில் துவாயும், காதுக்குள் மியூசிக்கும் உடன் ஜமில் நுற்பதுபோல் கட்டுடலுடன் உடல் வியர்க்க வியர்க்க மரத்தை பிளந்து உரிக்கிறார்.

பக்கத்தில் நீயிருந்தால் பாறாங்கலையும் பெயர்ப்பேன் என்று சொல்லாமல் சொல்லும் இந்த முதியவரின் உற்சாக பானம் அவர் அருகே நிற்கும் கட்டிய மனைவிதான்.

வசிப்பது ஓட்டை விட்டுதான்.இருந்தும் அவர்கள் வாழ்வில் எந்த விரிசல்களும் இல்லை.


டொட்மூண்ட் மாநகரில்....
தமிழர் அரங்கம்

வெள்ளிக்கிழமைகளில்
Jeden Freitag

தமிழர் அரங்கம்
Rheinische Srt.76-80
44137 Dortmund
Info:0151 633 633 33
0178 146 006 3

சனிக்கிழமை 15.00- 18.00
திரையிசை நடனம்
(Cinimatic Dance)

கீபோர்ட் (Keyboard)
வெள்ளிக்கிழமை 18:00–19:00
அனுபவம் வாய்ந்த ஆசிரியர்களால் கற்பிக்கப்படுகிறது.சிறுவர்களில் இருந்து பெரியோர்கள் வரை இணைந்து கொள்ளலாம்
Für Kinder und Jungendliche und Erwachsene!
6€ Pro Stunde

தமிழ் மொழி (Tamillsche Sprachunterricht)
வெள்ளிக்கிழமை 16:00–17:45
Free
அ ஆ இ ஈ உ
சிறார்களுக்கும்,இளையோர்களுக்கும், எளிமையான முறையில் தமிழ் கற்பிக்கப்படும்.
Für Kinder und Jungendliche!Auch speziell jugendliche, die sich mit der tamilische Sprache nicht auskennen

யேர்மன் மொழி (Deutsch für Anfänger / Innen)
ICH LERNE DEUTSCH
6€ Pro Stunde
வெள்ளிக்கிழமை 17.45 –19.15
யேர்மன் மொழியில் பேசவும் எழுதவும் கற்பிக்கப்படும் யேர்மன் குடியுரிமை பெறுவதற்கு பயன் உள்ளதாக அமையும்

விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.

# எங்கட ஆச்சி

04

எங்கட ஆச்சி முந்தி நெடுகவும் அம்மியில அரைச்சுத்தான் கறி வைப்பா. மல்லி மிளகாயை அம்மியிலை அரைச்சுப்போட்டு பேந்து தேங்காய்ச் சொட்டை சின்னன் சின்னனா உடைச்சு அதோடை சேத்து இழுத்து அரைச்சு நல்ல விழுதா உருட்டி எடுத்து வைக்கிற கறியள் வலு உருசை கண்டியளோ. அரைச்சு வைக்கிற வெள்ளைக் கடல் மீன், நண்டு, இறால் கறியள் முருங்கைக்காய் பிரட்டல் கறி எண்டால் தனி உருசை. அதிலும் கொஞ்சம் கூனி இறால் போட்டு அரைச்சு வைக்கிற முருங்கைக்காய் கறியை அடிக்க ஆளே கிடையாது எண்டுதான் சொல்லுவன் .ஆச்சி முருங்கைக்காய் பால் கறி வைக்கேக்கையும் அம்மியிலை கூட அரைச்சு எடுத்துத் தான் வைப்பா . ஆச்சி அரைச்சு வைக்கிற வெள்ளைக் கடல் கயல்மீன் குழம்பும் இல்லாட்டால் மணலை மீன் குழம்பும் மொட்டைக்கறுப்பன் அரிசிச் சோறும் தாற அந்த உருசையை எந்தப் பெரிய ஹோட்டலிலும் எவ்வளவு குடுத்தாலும் ருசிக்கேலாது. உப்பிடி அரைச்சு வைக்கிற குழம்பு கொதிக்கேக்கை வாற மணமே ஆக்களுக்கு வாயிலை எச்சில் ஊற வைக்கும் . அதுகும் உந்த மணம் வேலிக்கு மேலாலை மட்டைக காலுக்காலை எண்டு பூந்து வெளிக்கிட்டு ஒழுங்கை எல்லாம் போய் வரும். அப்பிடி போய் வரேக்கை ஒழுங்கையிலை போறவை வாறவைக்கு எல்லாம் வாயில எச்சில் ஊறும்.

அது மாதிரி ஆச்சி அம்மியில அரைக்கிற இஞ்சிச் சம்பலுக்கு கொஞ்ச ஊர் நல்லெண்ணையும் ஊத்திக் குழைச்சு எடுத்தால் சோத்தைச் சாப்பிட வேற கறி ஒண்டும் தேவைப்படாது. அதமாதிரி பழஞ்சோத்துக்கும் உந்த அம்மியிலை அரைச்ச சம்பல் போட்டு ஆச்சி குழைச்சு உருண்டை உருண்டை ஆக்கித்தர பூவரசம் இலையிலை வாங்கித் திண்டு முடிய குழைச்ச சட்டியையும் வழிச்சுத் துடைச்சு நக்கிப்போட்டுத்தான் மற்ற வேலை பாப்பம். சில வேளை உந்த சட்டி நக்குறதுக்கு ஆர் நக்கிறது எண்டு சண்டையும் வரும். அதை மாதிரித்தான் பிள்ளைப்பெத்த பெண்டுகளுக்கும் சாமத்தியப்பட்ட பெட்டையளுக்கும்



முந்தி இஞ்சி, சாறணை, உள்ளி, மிளகு, மல்லி , நற்சீரகம் எல்லாம் போட்டு அம்மியில அரைச்சு பத்தியக்கறி வைச்சுக் குடுப்பினம். அப்பதான் வயித்துப் புண் மாறும் எண்டு ஆச்சி சொல்லுறவ.

உத மாதிரி ஆற்றையும் வீட்டில பிள்ளைப் பெத்து வரப்போகுது எண்டால் மருந்துக்கடையளிலை ஊறல் சரக்கு வாங்கியந்து வெய்யில்லை காய வைச்சு காஞ்ச அம்மியிலை அரைச்சு எடுத்து சாராயப் போத்தில் வாங்கி அதுக்குள்ளை உந்த ஊறல் சரக்குத்தூளைப் போட்டு மூடி நெல்லுச்சாக்குக்குள்ளை ஒரு ஆறுமாதம் வைப்பினம்.பிள்ளைப்பெத்தவைக்கு அவை அண்டண்டைக்கு தோஞ்சதும் உந்த ஊறலிலை கொஞ்சம் ஊத் திக் குடுக்க அவை மூக்கைப் பொத்திக் கொண்டு குடிப்பினம்.உந்த அரைச்சபத்தியக்கறியும் உந்த ஊறலும் கைகண்ட மருந்து பிள்ளைப் பெத்த பெண்டுகளுக்கு இருக்கிற எல்லா நோக்களும் பலகீனமும் இருந் இடம் தெரியாமல் ஓடிப்போகும் எண்டு ஆச்சி சொல்லுவா.

அதமாதிரி அம்மியில இருந்து அரைக்கிறது கை, கால், இடுப்பு,முதுகு, நெஞ்சுக்கு நல்ல பயிற்சி எலும்புகளும் தசையளும் நல்ல பலமா வரும் எண்டு ஆச்சி சொல்லுவா. அதோட அம்மியிலை குந்தி இருந்து அரைச்சா பெண்டுகள் ரெண்டொரு முக்கலோடை வலு சுளுவா ஆக்கினை வேதினை ஒண்டும் இல்லாமல் பிள்ளைப் பெறலாம் எண்டுவா . டாக்குத்தர்மார் ஆசுப்பத்திரி எண்டு அலைஞ்சு திரிஞ்சு வயித்தை வெட்டி காசையும் கரியாக்கத் தேவையில்லை கண்ட கிண்ட வருத்தம் வாதையளையும் வாங்கத் தேவையில்லை எண்டுவா . அதிலும் நெடுக அம்மியில அரைக்கிற பெண்டுகளுக்கு பிள்ளைப் பெறு கிற காலத்தில நல்லா ப்பால் சுரக்கும் எண்டு சொல்லுவா. எங்கட அம்மா கோவிந்தி பள்ளிக்கத் தில அரிவரி படிக்கேக்கை பள்ளிக்கம் போக முந் தியும் பேந்து பள்ளிக்கத் தால வந்த பிறகும் பால் குடிச்சவ எண்டு ஆச்சி பெருமையாச் சொல்லுவா. அது மாதிரி அம்மியில நெடுக அரைச்சா உந்தப்



காரைக்கவி கந்தையா பத்மானந்தன்

பெண்டுகளுக்கு நெஞ்சில வாற கண்ட வருத்தம் ஒண்டும் வராது வெட்டுற அறுக்கிற வேலை ஒண்டும் வராது எண்டு சொல்லுவா. ஆச்சி உப்பிடிச் சொன்னதிலையும் ஒரு உண்மை இருக்கத்தான் செய்யுது. ஏனெண்டால் முந்தி அம்மியிலை அரைச்சு ஆட்டுக்கல்லிலை அரைச்சு உரலிலை நெல்லு க்குத்தி மா தூள் இடிச்சு கிணத்திலை தண்ணி அள்ளிக் குடத்திலை காவி யந்த திருவலையில குந்தி இருந்து திருவின ஆக்கள் விடியக்காலமையே எழும்பி வயல் வேலை ஆட்டடி மாட்டடி வேலை எண்டு செய்த ஆக்கள் எல்லாம் கண்ட கிண்ட வருத்தம் எண்டு ஆசுப்பத்திரியளுக்குப் போறது குறைவு. அவை ஒருத்தரும் பாயிலை கிடந்தது இழுபட்டது வலு குறைவு எண்டு நான் சொல்லுறதை எல்லாரும் ஏற்றுக்கொள்ளுவியள். இப்ப நாகரீகம் முத்திப்போய் காசு பணம் புழக்கம் கூடி சனத்துக்கு வீடுவழியை வேலை செய்யப் பஞ்சி. எல்லாத்துக்கும் கண்டறியாத மிசின்களை வாங்கி வைச்சு வேலை செய்யினம் . உண்ணானச் சொன்னால் தின்னுறது குடிக்கிறது பெய்யிறது பேலுறது படுக்கிறது எழும்பிறது மட்டுந்தான் எங்கட ஆக்கள் கனபேர் இப்ப தங்கட பாட்டிலை செய்யி னம் மாற்றும்படி எல்லாம் மிசிந்தான் செய்யுது . உதாலதான் அவைக்கு கண்ட கிண்ட வருத்தங்கள் எல்லாம் வந்து சீக்காளியளாகி டாக்குத்தர் மாருக்குப் பின்னாலை திரியினம். சில வேளை உதுகளுக்கும் மிசின்கள் வந்தா வாங்கிகிப்போட்டுப் போட்டு பேசாமல் இருப்பினம் போல. சுருக்கமாச் சொன்னா முந்தி எங் கட வீட்டுக்கு வீடு ஜிம் இருந்தது இப்ப வீட்டுக்கு வீடு ஜிம்முக்குப் போகினம்.








விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.


நீண்டகாலம் மக்கள் மனதில் நம்பிக்கை ஒளி பரப்பும் தங்க நகையகம்
Jaffna Bazar Jewellery
தங்க நகைகள் என்றால் தங்கள் மனதில் நிலைத்து இருப்பவர்கள் நாங்கள் என்றும் நாடுகள்
2025 ஆம் ஆண்டின் புதிய வரவு!
புத்தம் புது அழகிய டிசைன்களில் தங்க நகைகள்
பொன்னுருக்கு, காதுகுத்து வைபவங்களுக்கு எம்மை அழையுங்கள்
திருத்த வேலைகள் குறுகிய காலத்துக்குள் செய்து தரப்படும்
Branch:
Jaffna basar.
Taunus Str 31,
60329 Frankfurt Main
ஆலயங்களுக்கு தேவையான பூஜை பொருட்கள் எம்மிடம் நிறைவாக உண்டு
உங்கள் இலத்திற்கு தேவையான மளிகைப் பொருட்கள் என்றும் போல் மலிவு விலையில் கிடைக்கும்
KADHIR
Laila
ஆலயங்களுக்கு தேவையான பூஜை பொருட்கள் எம்மிடம் நிறைவாக உண்டு
பசுமையான மரக்கறி வகைகள்
கடல் உணவு வகைகள்
அனைத்தும் எம்மிடம் தரமாக மலிவாகக்கிடைக்கும்
Jaffna Bazar
Jaffna Bazar, Kaiser Straße.49 ,
69329 Frankfurt Main
Tel: 069 25 62 6353 \ 0049 69 25626353
0049 179 4792961 \ 0049 151 71520425



# கதிரைவேற் பெருமானே! கருணை தேவே!



கலாசூரி
திவ்யா சுஜேன்
(இலங்கை)

கற்றவர் தம் கருத்தெழுந்து கருணை பூக்கும் கற்பகக் கதிர் வேலனை கருதும் நெஞ்சத்தவராய், கதிர்காமப்பதி விளங்கும் கந்த குருமணியின் அற்புதங்களை சுமந்தேத்தி வருகிறது கதிரைவேற் பெருமானே ! கருணை தேவே ! நாட்டிய நாடகம்.

மூர்த்தி , தலம், தீர்த்தம் என்னும் மும்மையினாலும் புகழ்பெற்ற ஈழ நாட்டின் முருக வழிபாட்டு புண்ணிய க்ஷேத்திரமான கதிர்காமம், ஏமகூடம் என்று அழைக்கப்பட்டது முதல் சர்வமத ஆலயமாக பரந்தளவிலான பக்தர்களால் வணங்கப்பட்ட வரலாற்றினை காட்சிப் படுத்தியுள்ளது இந்த நாட்டிய நாடகம்.

உலகுக்கெல்லாம் பேரொளியாய் அன்பொழுகும் குணத்தவனாய் விளங்கும் கதிர்காமக் கந்தனே தஞ்சம் என்னும் அடியார்க்கு, அடியராய் அருளும் கருணை வாரிதியை காண வரும் பாத யாத்திரிகர் கூட்டம் அநேகம். கதிரையாண்டவன் கனவிற் தோன்றி அழைத்தாலே கதிரை யாத்திரை சித்திக்கும் என்பது ஐதீகம். அரகர என்று அனுதினமும் தொழுது , பரவெளியில் ஒளிமதியோடு இரவி சூழப் பங்கய ப் பூங்கதிரை மலையாளன் எங்கள் குருபரனை , அமரர் தொழும் குமரவேளை கும்பிட்டேன் என்பிறவி பின்விட்டேன் எனக் கோஷமிட்டு பரவசக் கூத்தாடி முருக நாமம் மொழிந்துருகும் பக்தர்களின் சக்திப் பிரவாகத்தை உணர்த்தாலன்றி சொற்களால் சொல்ல இயலாது.

ஒரு பற்றும் அற்று அருவுருவாய்தானே நிற்கும் தத்துவம் கடந்த பொருளை வழிபடும் கந்தழி வழிபாட்டு முறையும் கப்புறாளைகள் ஆற்றும் பூஜைகளும் நடைபெறும் துய்ய தென் கதிரைப்பதி வேலவரின் வருடம் தோறும் நடை பெறும் திருவிழா கதிர்காம க்ஷேத்திரத்தினை மட்டும் இன்றி இலங்காபுரியையே புண்ணிய பூமியாக்குகிறது.

”சொல்லினைத் தேனில் குழைத்து உரைக்கும் ” மலைவல்லி வள்ளியைக் கண்டு சொக்கி நின்று காதல் மணம் புரிந்த குமரனை கும்பிட்டால் வினை நீங்கும், நல்லன சித்திக்கும் என்ற நம்பிக்கையில் இலங்கையில் இருந்து மட்டும் இன்று வடா இந்தியாவில் இருந்து கதிர்காமம் வந்து வரம் பெற்றோர் கதைகளையும் உள்ளடக்கியதாக இந்த நாட்டிய நாடகம் அமைகிறது.



மணிமயமான மாணிக்க கங்கையும் , மட்டற்ற அழகு கொட்டிக் கிடக்கும் முருகக் கடவுளையும் தம் இணையில்லா இசையால் சிறப்பித்திருக்கின்றனர் இந்தியக் கலைஞர்கள். நாட்டிய நாடகத்திற்கான இசை அமைப்பு, பாடலாக்கம் என்பவற்றை மகாகவி சுப்பிரமணிய பாரதியாரின் கொள்ளுப் பெயரன் இசைமேதை டாக்டர் ராஜ்குமார் பாரதி அவர்கள் அமைத்துச் சிறப்பித்திருக்கிறார். ஒலி ஒருங்கிணைப்பு ஒலிப்பதிவு நிபுணர் கலைமாமணி திரு சாய் ஷ்ரவணம் அவர்கள் வழங்கியுள்ளார். வாய்ப்பாட்டு திரு ஸ்ரீகாந்த் கோபால கிருஷ்ணன் , திருஷ்ரவன், திருமதி கிருத்திகா அரவிந்த் , வயலின் இசை திரு எம்பார் கண்ணன் , குழலிசை திரு நவீன் சந்தர், மிருதங்கம் திரு கார்த்திகேயன் ராமநாதன் , தாள வாத்தியங்கள் திரு கணபதி வேங்கட சுப்ரமணியன் , வீணை திரு சுப்ரமணிய சர்மா, சித்தார் இசை திரு கிஷோர் குமார் , நாதஸ்வரம் திரு அடையார் பாலசுப்பிரமணி ஆகிய புகழ்பெற்ற கலைஞர்கள் பங்களிப்பு செய்துள்ளனர். திரு சர்வேஷ் ஒலிப்பதிவு கலைஞராக செயல்பட்டுள்ளார். இத்தகு முதல் தர இசையினை தம் உடல் மொழியில் சுமந்து ஆடல் அசைவுகளாக வெளிப்படுத்த இலங்கை- இந்திய கலைஞர்கள் நூற்றுக்கும் மேற்பட்டோர் ஒரு திரளாக இணைகின்றனர்.

கதிரைவேற் பெருமானே ! கருணை தேவே ! நாட்டிய நாடகம் ஜுலை 20 ஆம் திகதி மாலை 6 மணிக்கு கொழும்பு புதிய கதிரேசன் மண்டபத்தில் அரங்கேற இருக்கிறது. இல்லத்துப் பிள்ளையென முருகன் மீது மெய் அன்பு கொண்டு , தித்திக்க திதிக்கத் திருப்புகழ் பாடி நெக் குருகித் தொழும் முருக பக்தர்களின் ஆதரவினை நாடி நிற்பதோடு, இப்படைப் பின் மூலம் பெறப்படும் அத்தனை நல்லின்ப அதிர்வுகளும் அனைத்து உயிர்களுக்கும் சென்றடைக என்று பிரார்த்திக்கிறது அபிநயக்ஷேத்திரா.




வெற்றிமணி திருமண சேவை

யேர்மனியில்
Wirtschaftsingenieurin
ஆக படிப்பை நிறைவு செய்த
36 வயது நற்குணமுள்ள சைவ
வேளாள பெண்ணிற்கு பொருத்தமான
பட்டதாரி மணமகனை யேர்மனியில்
எதிர்பார்க்கும் பெற்றோர்.
தொடர்புகளுக்கு: 4915774318528

MOBIL: 0091-9841026997| Email: kbr0452@yhoo.co.in



மங்கல இசை

உங்கள் மங்களகரமான
வைபவங்கள் அனைத்திற்கும்
நாடுங்கள்.

ஐரோப்பிய தவில் சக்கரவர்த்தி
தவில் லயஞானச் சுடரொளி

கே.பி.செல்வநாயகம்

+ (49 )020249655696
Handy 004915161010905
01786664426


INNENSTADT WEST
தமிழர் அரங்கம்
Kulturbüro
Stadt Dortmund Kulturbetriebe
DORTMUND
தமிழர் தெருவிழா
Straßenfest der Tamilen 2025
05.09.2025
FR. 16:00 - 00:00
06.09.2025
SA. 11:00 - 00:00
07.09.2025
So. 12:00 - 19:00
Park der Partnerstädte
Bundesstraße 54
westentor
Rheinische Str.
SCAN ME
3 நாட்கள்
வெள்ளி - சனி - ஞாயிறு
Dortmunder U - Park der Partnerstädte
Gemeinsam in Vielfalt Der Integrationsrat
RUHRBEZIRK e.V.
TKD
VMDO
ortel MOBILE
ஊடக அனுசரணை
வெற்றிமணி
அகரம்
தமிழ் ரைம்ஸ் TAMIL TIMES
IBC தமிழ்
Lankasri
ETR
PAARPOM
எம்தமிழ்
tamil.nrw
0151633 633 33 | 0157 370 50 110 | 176 246 371 75 | 0151 279 909 90



# ஈரானில் உள்நுழையும் டிரம்ப்!

அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் ஈரானை நிபந்தனையின்றி சரணடையுமாறு அழைப்பு விடுத்த போதிலும், இஸ்ரேலுக்கும் ஈரானுக்கும் இடையே பரஸ்பரம் ஏவுகணைத் தாக்குதல்கள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

இந்த போரில் மிகப்பெரிய திருப்பம் ஏற்படும் வகையில் அமெரிக்கா தலையிட்டு வருகிறது என்று கூறப்படுகிறது. ஆயினும் இரு நாடுகளுக்கும் இடையிலான ஏவுகணை மோதல் நீடித்து வருகிறது.

இஸ்ரேலை நோக்கி ஈரான் இரண்டு ஏவுகணைகளை தொடராக ஏவியதாக இஸ்ரேல் ராணுவம் தெரிவித்துள்ளது. இதனால் டெல் அவிவ் நகரில் அதிரும் வெடிச்சத்தங்கள் தொடர்ந்து கொண்டே இருக்கின்றன.

அமெரிக்க அதிபர் டிரம்ப் டிரம்ப் ஜி7 மாநாட்டிலிருந்து முன்னதாகவே புறப்பட்டு வந்து, தேசிய பாதுகாப்பு கவுன்சிலுடன் செவ்வாய்க்கிழமை பிற்பகல் 90 நிமிடங்கள் கலந்துரையாடினார். மேலும் அவர் இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவுடன் பேசியதாகவும் கூறப்படுகிறது.

## டிரம்ப் இறுதி எச்சரிக்கை :

அமெரிக்காவே ஈரான் வான்வெளியை முழுமையாகக் கட்டுப்படுத்துகிறது என்று டிரம்ப் செவ்வாய்க்கிழமை அறிவித்தார். மேலும் “ஈரானிடம் நல்ல வான் கண்காணிப்பு கருவிகள் மற்றும் பிற பாதுகாப்பு உபகரணங்கள் நிறைய உள்ளன. ஆனால் அது அமெரிக்க தயாரிப்புக்கு ஈடாகாது. அமெரிக்காவை விட யாரும் சிறப்பாகச் செய்ய முடியாது.

இப்போதைக்கு ஈரான் தலைவரை கொல்லும் எண்ணம் இல்லை. ஆனால் ஈரானின் அதி உயரிய தலைவர் அயோத்துல்லா அலி காமெனி எங்கே பதுங்கியிருக்கிறார் என்று எங்களுக்குத் தெரியும் என்று டிரம்ப் எச்சரித்து உள்ளார். ஈரான் அணு ஆயுதங்களை தயாரிப்பதில் முன்னேறி வருவதாகவும், அது இஸ்ரேலின் பாதுகாப்புக்கு எதிரானது என்றும் கூறிக்கொண்டு இந்த தாக்குதல் நடவடிக்கையை துவங்கியது. தனக்கு இந்த தாக்குதலில் தொடர்பு இல்லை என்று அமெரிக்கா தெரிவித்து வருகின்ற போதிலும், இஸ்ரேலுக்கு ஏவுகணை மற்றும் வெடி மருந்து பொருட்களை வாரி வழங்கி வருகிறது.

# அமெரிக்கா தலையிடுவது எண்ணெய் வளத்திற்கா?



## இஸ்ரேலின் அதிரடி !

ஜூன் 13 அன்று, இஸ்ரேல் ‘ஆபரேஷன் ரைசிங் லயன்‘ (Operation Rising Lion) என்ற பெயரில் ஈரானில் உள்ள நடான்ஸ், கோண்டாப், கோர்ராமாபாத்தில் உள்ள அணுசக்தி நிலையங்கள், இராணுவ தளங்கள், ஏவுகணை உற்பத்தி தளங்கள் ஆகிய170 க்கும் மேற்பட்ட இடங்கள், 720 இராணுவ உள்கட்டமைப்பு வசதிகளை இலக்காகக் கொண்டு இராணுவத் தாக்குதலைத் தொடங்கியது.

அதைத் தொடர்ந்து இஸ்ரேலுக்கும் ஈரானுக்கும் இடையிலான மோதல் ஒரே இரவில் தீவிரமடைந்தது. தொடர்ச்சியாக வான்வழித் தாக்குதல்கள் நடத்தப்பட்டு வருகிறது. இரு நாடுகளின் தலைவர்களும் பதிலடிகள் தொடரும் என்று பேசி வருகிறார்கள். இந்தத் தாக்குதலில் இதுவரை, உயர் அதிகாரிகள், அணு விஞ்ஞானிகள் உட்பட 14 மூத்த ஈரானிய அதிகாரிகள் கொல்லப்பட்டுள்ளனர்.



ஐங்கரன் விக்கினேஸ்வரா

தெஹ்ரான் அடுக்குமாடி குடியிருப்பில் நடந்த தாக்குதலில் 20 குழந்தைகள் உட்பட 60 பொதுமக்கள் இறந்ததாக ஈரானிய அரசு தெரிவித்திருக்கிறது. அதே நேரம் ஈரான் இஸ்ரேலை குறிவைத்து சுமார் 200 பாலிஸ்டிக் ஏவுகணைகள், 100 ட்ரோன்கள் மூலம் பதிலடி தாக்குதலை நடத்தியது.

## ஈரானின் பதிலடி !

தற்போது ஈரான் முழுப் பலத்துடனான பதிலடியை இஸ்ரேலுக்கு வழங்குவதாக அறிவித்துள்ளது. ஈரானின் “உண்மையான உறுதிமொழி“ ( Operation True Promise) நடவடிக்கை என ஈரானின் இராணுவம் அறிவித்திருக்கிறது.

இம்முறை பதில் தாக்குதல் நடத்துவதற்கு ஈரான் அதிக காலம் எடுத்துக் கொள்ளவில்லை. அதனால் அமெரிக்க மற்றும் ஐரோப்பிய விமானப்படைகள் இஸ்ரேலுக்கு உதவ முடியவில்லை போலவும் தோன்றுகிறது. மேலும் பெருமளவான ஏவுகணைகளை ஒரே நேரத்தில் ஏவினால் இஸ்ரேலின் வான் எதிர்ப்புச் சுடுபலத்தை ஓரளவு மேவித்தாக்க ஈரானுக்கு முடிந்துள்ளது.

முக்கியமான இஸ்ரேலிய (Nevatim Air Base) விமானப் படைத்தளம் மீது ஈரானின் ஏவுகணை தாக்குதல் நடாத்தப்பட்டுள்ளது. நெவாட்டிம் ராணுவ விமான படைத்தளம் மீதான ஈரானின் ஏவுகணை தாக்குதலில் இஸ்ரேலிய விமானப்படையின் பலர் காயமுற்றுள்ள நிலையில் மருத்துவமனைகளுக்கு எடுத்து செல்லப்பட்டதாக கூறப்படுகிறது.

இஸ்ரேலில் இழப்புக்கள் தொடர்ந்து ஏற்பட்டால் எதிர்வரும் நாட்களில் ஈரான் மீதான தாக்குதல் தீவிரப்படலாம் என்று அஞ்சப்படுகிறது.

இஸ்ரேலிய சேனல் 13 வெளியிட்ட தகவலின்படி,ஈரானிய தாக்குதலால் டெல் அவிவ் வரலாற்றில் முதன்முறையாக பெரும் அழிவை சந்தித்து உள்ளது. பலடசின் கணக்கான கட்டிடங்கள், வாகனங்கள் ஈரானிய ஏவுகணைகள் மூலம் தாக்கப்பட்டுள்ளன. இது போன்று முந்தைய எந்த யுத்தத்திலும் இத்தகைய தாக்கம் இல்லையென்று கூறப்படுகிறது. மத்திய கிழக்கு இராணுவ சமநிலைக்கே பெரும் சவால் உருவாகியுள்ளது.





## நடுப்பக்கம்



சேவியர்
(தமிழ்நாடு)

# பாரங்கள் இலகுவானவை

வெற்றிமணி ஆசிரியர் பேரன்புக்குரிய சிவகுமரன் அவர்கள் இந்தப் புகைப்படத்தை எனக்கு அனுப்பியிருந்தார்.

படத்தைப் பார்த்தபோது நெகிழ்வும், வலியும் கலந்த உணர்வு இதயத்தை ஆக்கிரமித்துக் கொண்டது. பாரத்தைத் தலையிலும், பாசத்தை இதயத்திலும் சுமந்து திரியும் வாழ்க்கை வலிகளின் இடையிலும் மகிழ்வானது.

அவர் சுமந்து வருவது வெறும் பாரமல்ல, பல தலைமுறையின் துயரம். தேயிலைத் தோட்டங்கள் தங்களுடைய வாழ்க்கையை சுவையாக்கும் என நினைத்திருப்பார்கள். ஆனால் அவர்களுடைய வாழ்க்கை கிள்ளப்பட்ட தேயிலை இலை போல வறட்சியை நோக்கி இடம் பெயர்கிறது. இருந்தாலும் இந்தத் தம்பதியர் சுமை சுமந்து நடக்கின்றார்கள். உண்மையில் அவர்கள் சுமைகளைச் சுமக்கவில்லை, ஒருவரை ஒருவர் சுமக்கிறார்கள்!! நம்பிக்கையில்லாத இந்த உலகில் இவர்கள் ஒருவர் மீது ஒருவர் அதிகபட்ச நம்பிக்கையை வைத்திருக்கிறார்கள்.



அரசுகள் மாறுகின்றன, திட்டங்கள் மாறுகின்றன, தொழில்நுட்பம் வளர்கிறது. சந்திரனில் குடியேறலாமா அல்லது வியாழனில் குடியேறலாமா என வானியல் விவாதம் நடத்துகிறது. ஆனால் இவர்களின் வாழ்க்கையோ மலைச் சரிவுகளில் வழுக்கிக் கொண்டே திரிகிறது. அவர்கள் பறக்க விண்கலம் கேட்கவில்லை, காலூன்ற சிறு நிலம் கேட்கிறார்கள்.

குறட்டைக்காக டைவர்ஸ் கேட்கும் காலத்தில் இவர்கள் குறைகளோடும் காதலிக்கிறார்கள்.

அவர்களுடைய காதல் காலங்களால் பாதுகாக்கப்பட்ட தேனீரைப் போல மலைச்சரிவுகளை மணமாக்குகிறது. அதன் வாசனை தேயிலை இலைகளுக்கே தாகத்தைத் தருகிறது. அந்த பிராந்தியம் அந்த அன்பின் காட்சியைப் பருகி கண்நனைகின்றன. நட்சத்திர ஹோட்டல்களை அறியாத அவர்களின் வாழ்க்கை, ஒழுகும் தகரக் கூரைகளின் இடையேயும் ஒழுகாத அன்பைப் பாதுகாத்து வைக்கிறது.

அவர்கள் செல்பி எடுத்து சமூக வலைத்தளங்களில் போடுவதில்லை. லைக்களுக்காக ரீல்கள் செய்வதில்லை. பிட்காயின் என்றால் என்ன, பங்குச் சந்தை என்றால் என்ன என்பதெல்லாம்



அவர்கள் அறிவதில்லை. ஆனால் ஒருவருக்கொருவர் துணையாய் இருப்பதன் அவசியத்தை அவர்கள் அறிகிறார்கள். ஒருவர் குறையை இன்னொருவர் இட்டு நிரப்பும் வித்தையை அவர்கள் புரிந்திருக்கிறார்கள். அவர்களுடைய கரங்கள் உழைப்பால் கரடு முரடாய் இருக்கலாம், ஆனால் இதயம் கனிவால் மென்மை காக்கிறது.

பாரத்தோடு நடக்கும் முதியவர் தடுமாறுகையில், அவளின் கரங்கள் இன்னும் இறுக்கமாய் பற்றிக் கொள்கின்றன. அவளது கால்கள் வலிக்கையில் அவர் பாரத்தைப் பொருட்படுத்தாமல் நிதானிக்கிறார். ஏனெனில் அவர்களுக்குத் தெரியும், அன்பு எதையும் தாங்கும், எதையும் சகிக்கும் என்பது ! உலகம் டிஜிடல் லைக் களுக்குள் சிக்கிக் கிடக்கின்ற இந்த காலகட்டத்தில் இவர்கள் உண்மையான அன்பின் விருப்பங்களில் சிக்கிக் கிடக்கிறார்கள்.

நமது கவலைகளெல்லாம் இப்போது வைஃபை வேகமில்லை என்பதில் தான் இருக்கிறது. வீடியோ ஒழுங்காக ஓடவில்லை என்பதில் தான் இருக்கிறது. போன் கீழே விழுந்து உடைந்து விட்டதே என்பதில் தான் இருக்கிறது. இத்தகைய எளிய மனிதர்கள் சுமக்கின்ற வேதனைகளையும். அவர்களின் இதயத்தில் ஓடும் அன்பையும் நாம் உணர்வதில்லை. போனுக்கு பாதுகாப்பு டெம்பர் கிளாஸ் ஒட்டவேண்டும் என ஓடுபவர்கள், இந்த எளிய மனிதர்களின் சுமையைக் கொஞ்சம் சுமக்க வேண்டும் என நினைப்பதில்லை. காலம் நம்மை தொழில்நுட்பத்தின் உச்சத்தில் வைத்திருக்கிறது. மனித நேயத்தின் பக்கத்திலிருந்து விலக்கியிருக்கிறது.

நமக்குப் பார்வை இருக்கிறது ! அன்பு இருக்கிறதா ? உயர்ந்த

17 ஆம் பக்கம் பார்க்க...



விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.

# பாரங்கள் இலகுவானவை

இடங்களில் வாழ ஆசைப்படும் நாம் இத்தகைய மனிதர்களை உயர்ந்த இடங்களுக்கு ஏற்றிச் செல்ல வேண்டும் என நினைக்கிறோமா? இத்தகைய சின்னம் சிறிய சகோதரர்களில் ஒருவருக்கு நீங்கள் செய்வதெல்லாம் எனக்கே செய்தீர்கள் என இயேசு சொன்னது மதவாதிகளுக்கேனும் கேட்கிறதா ?

இந்த எளிய மனிதர்கள் செல்வம் இல்லாமல் ஏழையாய் இருக்கிறார்கள். நாமோ கருணை இல்லாமல் ஏழைகளாய் இருக்கிறோம்.

இந்த மனிதர்கள் நமக்கு பெரிய பெரிய வாழ்க்கைப் பாடங்களைக் கற்றுத் தருகிறார்கள். அவரால் பார்க்க முடியாது, ஆனால் அவளது அருகாமையை ஒவ்வொரு கணமும் உணர்கிறார். அவளால்





பாரம்சுமக்க முடியாது ஆனால் அன்பைச் சுமந்து கொண்டே திரிகிறார். ஒரு நிழலைப் போல. இரத்த ஓட்டம் உள்ள ஒரு இருட்டு நிழலைப் போல. உனக்காய் நான் இருக்கிறேன் எனும் உத்திர வாதத்தை விட உயர்ந்தது எது ?

அவர்கள் இருட்டு வாழ்க்கை வாழ்ந்தாலும், வெளிச்சத்திலல்லவா இருக்கிறார்கள். நாம் வெளிச்சத்தில் இருந்தாலும் குருடர்களாய் அல்லவா அலைகிறோம் !

நாம் அவர்களை பரிதாபமாய்ப் பார்க்க வேண்டாம்! அதுவல்ல அழகு. நாம் அவர்களை மரியாதையுடன் பார்க்க வேண்டும். அதுவே அழகு.

நாம் ஏதோ மன்னர்களாய் நம்மைப் பாவித்துக் கொண்டு அவர்களுக்கு உதவுவதல்ல இங்கே முக்கியம். நாம் அவர்களை சகோதரர்களாய்ப் பாவித்து அவர்களை அரவணைப்பதே முக்கியம்.

அவர்களுக்கான பொருளாதாரம், அவர்களுக்கான கல்வி, அவர்களுக்கான சமூக அந்தஸ்து, அவர்களுக்கான அரசியல் அங்கீகாரம் இவற்றை நோக்கியல்லவா நாம் பயணிக்க வேண்டும். ஒவ்வொரு முறை நாம் ஒரு குவளை தேனீரைக் கைகளில் ஏந்தும் போதும்,

இத்தகைய எளிய மனிதர்களின் கண்ணீர்த் துளி அதில் கலந்திருக்கிறது எனும் எதார்த்தமல்லவா நமக்குள் எதிரொலிக்க வேண்டும் !

உலகம் வெளிச்ச மேடைகளைத் தேடி ஓடுகிறது. அல்லது, வெளிச்சத்தில் வாழ்பவர்களைத் தேடி ஓடுகிறது. நாமோ, வெளிச்சம் இல்லாத மக்களைத் தேடிச் செல்வோம். யாரும் பார்க்க மறுக்கின்ற மக்களைப் பார்க்கத் தொடங்குவோம். ஏனெனில் இவர்கள் நமக்கான அன்பின் கலங்கரை விளக்கங்கள். நாம் அன்புடையவர்களா என்பதை பரிசோதிக்க இறைவனால் அனுப்பப்பட்ட வான தூதர்கள்.

**அன்பை வினியோகிப்போம்**
**டிஜிடல் திரைகளை விட்டு விட்டு**
**உலகின் தரைகளில்**
**பார்வையைத் திருப்புவோம்**







# சில நெருடல்கள்

**அருவிமகள்**
(பூண்டுலோயா)

இலங்கை சென்றேன் மலையகம் மனதை நிறைத்தது ஆங்காங்கே சில நெருடல்களுடன்.

மலையக பாடசாலை ஆசிரியர்கள், அன்று மலை நாட்டவர்கள் அல்ல. பலரும் வடக்கு கிழக்கைச் சேர்ந்தவர்கள். அதனால் மலைய மக்கள் அவர்கள் சிலரது செயற்பாட்டால்தான் மலைய மக்கள் கல்வி உயரவில்லை என்று ஒரு குறையிருந்தது.

இன்று அந்தக்குறையை எவர் மீதும் சொல்ல முடியாது.

காரணம் மலையகப் பாடசாலை





பெரும்பாலான பாடசாலை ஆசிரியர்கள் முதல் அதிபர்கள் வரை மலையகத்தவரே.

பிள்ளைகளை கை பிடித்து அழைத்து செல்ல வேண்டியது இல்லை.

அவர்களை தன்னம்பிக்கையுடன் நடக்கவிட்டு தேவையான நேரங்களில் மட்டும் கரம் கொடுத்தால் போதும்.

பாடசாலைக்கு அருகே ஒரு பார் இருக்கப்பாடது என்கிறது அரசு. அதனாலோ என்னவோ இரு பார்கள் காணப்படுகின்றன.

ரணில் ஜனாதிபதியாக இருந்த காலத்தில், தேர்தலின் போது, அள்ளிக் கொடுத்த லைசன்சால் வந்து பெருகிய பார்கள் அவை. தேயிலைத் தோட்டங்கள் நடுவே கண்டெடுத்த போத்தல்கள் இவை. பால் போத்தல் அல்ல பார்போத்தல்கள் அவை. அரசு தரம் ஐந்துக்கும் கீழ் உணவும், யூனிபோமும் இலவசமாக கொடுக்கிறார்கள்.

ஆசிரியர்களே!

கல்வியை நீங்கள்தான் கொடுக்க வேண்டும்.



விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.



# காதலுக்குப் பின்னால் இருக்கும் அறிவியல் என்ன?



Dr.நிரோஷன் தில்லைநாதன்
(யேர்மனி)

நான் அறிவியலைக் காதலிக்கிறேன் என்பது உங்கள் எல்லோருக்குமே நன்றாகத் தெரியும்! இப்படி அறிவியலைக் காதலிக்கும் நான், காதலின் அறிவியல் பற்றி எழுதாமல் இருக்க முடியாது தானே, நண்பர்களே? எனவே காதலுக்குப் பின்னால் இருக்கும் அறிவியல் என்ன என்பதைப் பார்ப்போமா?

காதல் என்கின்ற அந்த உணர்வு எங்கே நடைபெறுகின்றது என்று உங்களுக்குத் தெரியுமா? பலர் சொல்வார்கள் காதல் இருதயத்தில் தான் உருவாகின்றது என்று, ஆனால் அது உண்மை கிடையாது. காதல் மூளைக்குள் தான் உருவாகி நடைபெறுகிறது. இதில் என்ன அதிசயம் என்றால், காதலிப்பவர்களின் மூளை கோக்கைன் (cocaine) எனப்படும் போதை மருந்து எடுப்பவர்களின் மூளை போல் இருக்குமாம். அப்படிச் சொல்வதற்கு காரணம் என்னவென்றால், கோக்கைன் பாவிப்பதால் மூளையில் இருக்கும் மகிழ்ச்சி மையம் (pleasure center) செயல்படுத்தப்பட்டு இதன் விளைவாக எப்போதுமே மிக இலகுவாக ஒரு மகிழ்ச்சி நிலையை அடைந்துவிடலாம். இதே போல் தான் காதலிப்பவர்களும் தமது காதலன்ஃகாதலியைக் காதலிப்பது மட்டுமில்லாமல், தமது சூழலையும் மகிழ்ச்சியுடன் ஒரு விதமான காதல் பார்வையிலே பார்ப்பார்கள்.

இதில் இன்னும் ஒரு சிறப்பும் இருக்கிறது! காதலிக்கும் போது பயம் மற்றும் வெறுப்பு போன்ற உணர்வுகள் குறைந்து, கவலைகள் அனைத்தும் பறந்தே போய்விடும். இப்படிப்பட்ட இந்த மகிழ்ச்சி மையத்தை உதாரணத்திற்குக் கல்வி கற்கும் போது தூண்டினால், நாம் படிப்பதைக்கூட மிகவும் சுலபமாகச் செய்து விடுவோம்.



சரி, காதல் என்கின்ற உணர்வு மூளைக்குள் நடைபெறுகின்றது என்று முதல் கூறியிருந்தேன். அப்படியென்றால் இந்த உணர்வுக்கு ஏதாவது வேதியியல் பொருள்கள் தானே காரணமாக இருக்க வேண்டும்? நிச்சயமாக! டோபமீன் (Dopamine), நோரெப்பினெப்ரின் (Norepinephrine) ஒக்சிடோசன் (Oxytocin) என்று அழைக்கப்படும் வேதியியல் பொருள்கள் தான் நாம் காதலிக்கும் அந்த நபரை மேலும் மேலும் விரும்புவதற்கு ஊக்கத்தையும் ஏக்கத்தையும் தருகின்றன. இது போதாது என்று தீவிர சக்தி, அக்கறை மற்றும் நன்னிலை உணர்வுகளையும் கொடுக்கின்றன. என்ன தான் காதலின் அறிவியலை ஆராய்ந்தாலும், காதல் ஒரு கண்ணில்லா மர்மம் தான்! உண்மை சொல்லப்போனால் ஆராய்ச்சியாளர்கள் இன்று வரை காதலின் அறிவியலை முழுமையாகப் புரிந்து கொள்ளவில்லை. ஆனால், இப்படிப் புரியாத இந்தக் காதல் நமக்குள் மலரும் போது நாம் காதலிக்கின்றோம் என்பது மட்டும் நமக்குத் தெளிவாகத் தெரிந்து விடுகிறது.

ஆக மொத்தத்தில் காதல் ஒரு போதை மாதிரி. சிம்பிள் ஆகக் கூறப்போனால், காதலிப்பதை நாம் காதலிக்கின்றோம் (we love being in love). ஆஹா என்னாலேயே தாங்க முடியலடா சாமி!

இனி நீங்கள் கூறுங்கள் நண்பர்களே! நீங்களும் காதலிக்கின்றீர்களா அல்லது காதலித்தீர்களா?




விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.







# யேர்மனியில் இடம்பெற்ற எனது சித்திர சிற்பக் கண்காட்சியும் கலைவிளக்கு சு.பாக்கியநாதன் அவர்களின் பங்கும்

**மு.க.சு.சிவகுமாரன்**

1981 ம் ஆண்டு நான் யேர்மனிக்கு வந்து 3 மாதங்களில் நான் வசித்த lud wigsa tadt நகரில் எனது முதலாவது சித்திர சிற்பக் கண்காட்சி இடம்பெற்றது. மாநகர உதவி மேயர் திரு.லின்டிக் அவர்கள் திறந்து வைத்தார்கள். கண்கா ட்சி முழுக்க முழுக்க யேர்மனியர்க ளுக்கானதாக இருந்தது. காட்சிகள் மட்டும் தாயகத்தின் சாயலில் அமைந்தது.

1985 ம் ஆண்டு Lüdenscheid நகரத்திற்கு நான் இடம்மாறியதும், டோட் மூண்ட் நகரில் ஒரு திருமண வைபவத் தில் சற்றும் எதிர்பாராத விதமாக எனது பல்கலைக்கழக நண்பன் சு.பாக்கியநா தன் அவர்களையும் அவரது மனைவி விக்னா பாக்கியநாதன் அவர்களையும் சந்தித்தேன்.

அன்று அந்த எதிர்பாராத சந்திப்பு பல எதிர்பாராத மாற்றங்களை என க்கு ஏற்படுத்தியது என்றுதான் சொல்ல வேண்டும். எனக்கும் பாக்கியநாதன் அவர்களுக்குமான உறவு புத்துயிர் பெற்றது.மீண்டும் நெருங்கிய நட்பினால் திரு சு.பாக்கியநாதன் அவர்களும், திரு. மு.க.சு.சிவகுமாரன் ஆகிய நானும் பாக்கியும், கண்ணாவுமானோம்.

எனது செயற்பாடுகளை அறிந்த பாக்கி ஏன் இங்கு தமிழ் மக்களும் அறியும் வண்ணம் உங்கள் கண்காட்சியை நடத் தக்கூடாது என்று கேட்டது மட்டுமல்ல, தனது வேலை யையும், உடன் ஆரம்பி த்தார். பாக்கிக்கும் எனக்கும் அன்று முதல் இன்றுவரை ஒரு குணம் உண்டு. முரண்பாடுகள் மத்தியிலும் ஏதும் ஒன்று சரியான பட்சத்தில் அதில் உடன்பாடு காண்பது. 'அதாவது முரண்பாட்டிலும் சில உடன்பாடுகள்' காணும் அணுகுமுறை.



இந்த உடன்பாடு காரணமாக படுவே கமாக பாக்கி ஒரு கண்காட்சிக்கு ஒழு ங்கை மேற்கொண்டார். முதலில் இடம், காலம் என்பவற்றை தீர்மானித்தோம். சரியாக மூன்று மாதத்தின் பின் அது சாத்தியமானது. இதற்கு முக்கியமாக அடி கோல் இட்டவர் பாக்கியநாதன் அவர்களே.

யேர்மனியில் டோட்மூண்ட் நகரில் கரிதாஸ் நிறுவனத்தின் மண்டபத்தில் 1990 ம் ஆண்டு சித்திரை மாதம் 20,21, வெள்ளிக்கிழமை, சனிக்கிழமை இரு தினங்களில் எனது சித்திர, சிற்பக்கண் காட்சி இடம்பெற்றது.கண்காட்சியை டோட்மூண்ட் (Cari tas) கரிதாஸ் நிறு வனத் தலைவி செல்வி காமன் (Haar mann )அவர்கள் திறந்து வைத்தார்கள்.

உண்மையைச் சொல்வது என்றால், அன்று எனது கண்காட்சி யேர்மனிய மக்கள் மத்தியில் இருந்த ஆர்வத்திற்கு ஈடாக தமிழ் மக்கள் மத்தியில் இருக்க வில்லை என்பதே உண்மை.அதற்காக தமிழ் மக்கள் கலை இரசனை அற்றவ ர்கள் என்று சொல்ல முடியாது.

அதற்கு வலுவான காரணம் உண்டு. யேர்மனிய மக்கள் ஒரு சுமுகமான வாழ்வை வாழ்ந்து வருகிறார்கள்.நாம் தாயகத்தில் இருந்து யேர்மனியில் ஒரு இருப்பை தக்க வைத்துக்கொள்ளவும், பிள்ளைகள் கல்வி தொடர்பான பல விடயங்களில் கவனம் செலுத்தவும், இருப்பிடம், வேலை, வதிவிட விசா என பலவற்றில் மனம் தவித்துக் கொண்டு இருக்கும்போது எப்படி கவலைகளோடு கலையை இரசிக்க முடியும். ரசிப்பதற்கு மனநிலை நன்றாக இருப்பது அவசியம். கலைஞனுக்கு எதிர்மாறாக கவலையான போதே, மனக்குழப்பமானபோதே கலை கள் அற்புதமாக தோற்றம் பெறும் என் பார்கள். இருந்தாலும் பாக்கியநாதன் எடுத்த முயற்சி தோற்கவில்லை. அதற்கு காரணம் ஆரம்பத்தில் ஏற்படும் தோல்வி என்பது எமது வெற்றிக்கான முதல் அடி என்பதில் பாக்கியநாதன் எப்போதும் உறுதியானவர்.

இந்த தோல்வி கற்று தந்த பாடம், முதலில் எமது இளம் சந்ததியினருக்கு எமது கலைகளை போதிப்பது, சித்திர வகுப் புகள் நடத்துவது என்பதாகும். கண்காட்சி



மலர் வர்ணத்தில் வரவேண்டும் என்ற எனது விருப்பத்திற்கு முன்னுரிமை தந்து யேர்மனியில் அதற்கான ஒரு அச்சகம் ஒன்றை எனக்கு அறிமுகப்படுத்திய பெருமை பாக்கியநாதனுக்கே சேரும்.

டோட்மூண்ட் நகரில் ஒரு வியட்நாம் நபரின் அச்சகம் அது. எதற்கும் வளைந்து கொடுத்து நடக்கும அற்புதமான நல்ல மனிதர். சில நேரங்களில் நீர்க்குமிழி நாகேஷ் போல் முகம் கவலை தோய்ந்து இருக்கும். ஆனால் எம்மைக்கண்டதும், காதலிக்க நேரமில்லை நாகேஷ் போல் கலகலப்பாகிவிடுவார்.

அவர்தான் முதலில் நான்கு வர்ண த்தில் எனது ஓவியக்கண்காட்சி மலரான 'புதிய வடிவங்கள்' அச்சில் தந்தவர். அதுவே யேர்மனியில் வெளிவந்த முதல் தமிழ் வர்ணப்பதிப்பு. கலைவிளக்கு சஞ்சிகை, அவர்கள் வெளியிட்ட சில நூல்கள் இவற்றில் எனது ஓவியங்கள் இடம்பிடித்தன. அதனைத் தொடர்ந்து எமது நட்பு ஈழமணி பத்திரிகை ஒன்றை நடத்தும் அளவுக்கு வளர்ந்தது.

எனது ஒவ்வொரு வெற்றிக்கும் பின்னால் ஏதோ ஒரு விதத்தில் பாக்கியநாதன் இருக்கிறார். அந்த இருப்பை சரியான முறை யில் எடுப்பவர்கள் மட்டும் வெற்றி காண்கிறார்கள் என்பதும் உண்மை.

பி.குறிப்பு.படங்களில்.திரு.ஶ்ரீ ஜீவகன், திரு.சு.பாக்கியநாதன், திருமதி.விக்னா. பாக்கியநாதன், திரு.க.சிவதாசன், செல்வி.காமென், அமரர் சங்கீத ஆசிரியர் வி.எஸ்.செல்வராஜா,திரு.சந் திரபாலா ஆகியோர் காணப் படுகின்றனர்.







விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.



# திருவாசகத்தில் அறிவியல்

நரியைப் பரியாக்கி விட்டதும் பிட்டுக்கு மண்சுமந்து பிரம்படி பட்டதும் இறைவனே இறங்கிவந்து எழுத்தாணி தொட்டதும் வள்ளலார் சன்மார்க்க நெறி பெற்றதும் மனிதன் கடவுளுக்குச் சொன்னதுமான ஓர் அறிவாசக நூல் திருவாசகம். கடவுளின் கருணையைப் பாடிய நூல்களுக்கு மத்தியில் கருணையையே கடவுளாகப் பாடிய நூல் திருவாசகம்.

> **“திருவாசகத்திற்கு உருகாதார்**
> **ஒருவாசகத்திற்கும் உருகார்“**
> **என்றால் அது சாதாரண வாக்கல்ல.**

ஏகன் அனேகன் இறைவன் அடி வாழ்க, ஆர்த்த பிறவித்துயர் கெட நாம் ஆர்த்து ஆடும் தீர்த்தன் நல் தில்லைச் சிற்றம் பலத்தே தீ ஆடும் கூத்தன்இ ஏது அவன் ஊர்? ஏது அவன் பேர்? ஆர் உற்றார்? ஆர் அயலார்? ஏது அவனைப் பாடும் பரிசேல் ஓர் எம்பாவாய் என மணிவாசகர் ஈசனைக் கண்ட அதே நூலில் ஜி.யு. போப் யேசுவைக் கண்டார் என்றால் திருவாசகம் மதம் சார்ந்த நூல் அல்ல் மதங்களைத்தாண்டி மனிதனை மனிதனாக்கும் ஓர் அற்புத நூலாகும். நாயிற் கடையாய் கிடந்த வாதவூரர் விளம்பிட தாயிற் சிறந்த தயாவான அம்பலவன் எழுதிய நூல் திருவாசகமாகும்.

51 பதிகங்களையும் 658 பாடல்களையும் கொண்டு இந்நூல் அமைந்துள்ளது. நமசிவாய வாழ்க என ஆரம்பமே ஐந்தெழுத்து மந்திரத்துடன் அமைந்துள்ளது. இவ்வாறு தொடங்கிய வாதவூரர் இறுதியாக அச்சோப்பதிகத்தில் திருவாசகத்தின் இறுதிப் பாடலில் அம்மையெனக்கு அருளியவாறு ஆர் பெறுவார் அச்சோவே என்று அப்பனில் தொடங்கி அம்மையில் முடிகின்ற அறிவுநூல் திருவாசகமாகும். திருவாசகத்தின் முதற் பகுதியான சிவபுராணத்தில் திருவாசகத்தின் ஒரு பொழிப்புரை இடம்பெற்றுவிடுகிறது. நமசிவாய வாழ்க என்று தொடங்கி ஆறு இடங்களில் வாழ்க என்றும், வேகம் கெடுத்தாண்ட வேந்தன் அடி வெல்க என்று தொடங்கி ஐந்து இடங்களில் வெல்க என்றும், ஈசன் அடி போற்றி என்று தொடங்கி எட்டு இடங்களில் போற்றி என்றும், பாடப்பட்டுள்ளது. இது எதைக் குறிக்கின்றது எனில் ஆறு ஐந்து எட்டு என்றும் சேர்த்துப் பார்க்கும் போது அறுநூற்று ஐம்பத்து எட்டு பாடல்களைக் குறித்து நிற்கின்றது. தீர்க்தரிசியான வாதவூரர் தன் முக்திப்பேறு முப்பத்திரண்டாவது வயதில் என்பதை சிவபுராணத்தின் முப்பத்திரண்டாவது வரியில் மெய்யே உன் பொன்னடிகள் கண்டு இன்று வீடுற்றேன் என்று பாடுகிறார். ஏகம் ஸத் விப்ரா பஹுதா வதந்தி என்று ஒன்றே இறைவன் அதை ஒவ்வொருவரும் ஒவ்வொரு மாதிரி உரைப்பார்கள் என்று இருக்கு வேதத்தில் அமைந்த சுலோகத்தை ஏகன் அனேகன் இறைவன் அடி வாழ்க என்று திருவாசகத்தில் பாடுகின்றார்.

மாணிக்கவாசகர் அறிவியலையும் ஆன்மீகத்தில் கலந்து பாடியுள்ளார். அதாவது மருத்துவம், வானியல், இரசாயனவியல், உயிரியல் போன்ற பல்துறை சார்ந்து 18ம் நூற்றாண்டுகளில் விஞ்ஞானிகள் முன்வைத்த கருத்துக்களை மாணிக்கவாசகர் 9ம் நூற்றாண்டிலேயே முன்வைத்து விட்டார். அரிஸ்டோட்டில், தியோபிரஸ்ரஸ், றொபேட் விற்றேக்கர், காள் வூஸ், சாள்ஸ் டார்வின் என்று பல விஞ்ஞானிகள் முன்வைத்த பாகுபாட்டு மற்றும் கூர்ப்பு வரலாறை Short and Sweet ஆக புல்லாகிப் பூடாகிப் புழுவாய் மரமாகி பல்விருகமாகிப் பறவையாய்ப் பாம்பாகி கல்லா மனிதராய் பேயாய்க் கணங்களாய் வல்லசுரராகி முனிவராய்த் தேவராய் செல்லாஅ நின்ற இத் தாவர சங்கமத்துள் என்று ஏழு பிறவிகளைக் கூறியுள்ளார். இங்கு மனித வளர்ச்சியையும் தாண்டி மண்ணிலும் விண்ணிலும் இருக்கும் கண்ணுக்குப் புலப்படும் கண்ணுக்குப் புலப்படாத தேவர்களையும் வல்லசுரர்களையும் சேர்த்துப்பாடியுள்ளார்.



சிவகரன் அபிசாய்ராம்
மகாஜனாக் கல்லூரி
(வகுப்பு 12. விஞ்ஞானம்)

இதுமட்டுமல்ல, மேலும் பிரிக்க முடியாத மிகச்சிறிய துணிக்கைகளை அணுக்கள் எனக்கூறிய டால்ற்றன் இற்கு முன்னரே சென்று சென்று அணுவாய்த் தேய்ந்து ஒன்றாம் என்று ஒவ்வொன்றாக பிரித்தெடுத்தால் ஒன்று எஞ்சும் அதுவே அணு என்பதை வாதவூரர் அன்றே கூறினார். இப்பரந்த உலகானது கோள வடிவானது என்று கலிலியோவும் கொப்பநிக்கல்ஸ் உம் முன்வைக்க முன்னரே அண்டப்பகுதியின் உண்டைப்பிறக்கம் அளப்பரும் தன்மை என்று பாடிவிட்டார். இதுமட்டுமல்லாது நூற்றொரு கோடியின் மேற்பட விரிந்தன இல்நுழை கதிரின் துன் அணுப்புரைய என்று ஒரு வீட்டிலுள்ள சிறு துளையினூடாக செல்லும் சூரிய ஒளியில் தென்படும் தூசுத்துணிக்கைகள் போல இந்த அண்டப்பகுதியிலும் கோடிக்கணக் காண கோள்கள் வலம்வருகின்றன என்று பாடுகின்றார்.

ஜகத்தின் உற்பத்தி பற்றிக் கூறும் போற்றித்திரு அகவலில் மனிதனின் பிறப்பு எடுத்துக்கூறப்பட்டுள்ளது. ஒருதாய் குழற்தையை பத்து மாதங்களாய் சுமக்கும் போது உருவாகும் துன்பங்களையும் அதிலிருந்து பிழைத்துக்கொண்டு ஒரு குழந்தை பிறப்பதையும் அழகாக மாணிக்கவாசகர் பாடியுள்ளார். பெரிய கடல் சூழ்ந்த உலகினில் வாழ்கின்ற யானை முதல் எறும்பு ஈறாக உள்ள பெரியனவும் சிறியனவுமாகிய வடிவ முடைய உயிரினங்கள் அனைத்தும் யாதொரு குறையுமில்லாத தாயின் கருப்பையில் தாம் செய்த வினைகளுக்கு ஏற்றாற்போல போராடி வெற்றி பெற்று பின் வாழ்த்தி வணங்குதற்கு எளியவனாய் மானிடப்பிறப்பு எய்துகின்றன. உயிர்கள் மானிடப்பிறப்பு எய்துவதற்கு பத்து மாதங்கள் தம் தாயின் கருவறையில் தங்கி வாழ்கின்றன. அவ்வாறு தங்குவதற்கு முன்பு பெண்ணின் கருப்பையிலுள்ள முட்டைகள் பலவற்றுள் ஒன்றுடன் ஆணின் விந்தணுக்கள் பலவற்றுள் வினைப்பயனுக்கேற்ப யாதாயினும் ஒன்று மட்டும் புகுந்து கலந்து கருவாகி சிறிது சிறிதாக வளர்கிறது. முதலாம் மாதத்தில் ஒரு தான்றிக்காயின் அளவு வளர்ச்சியுற்று இரண்டாம் மாதத்தில் தன் அளவில் வலுப்பெற்று நின்று மூன்றாம் மாதத்தில் கருப்பையில் சுரக்கும் கொழுப்பு நீர்ப்பெருக்கில் அழியாது பிழைத்தும் நான்காம் மாதத்தில் தன்னைச்சுற்றியுள்ள இருளிலிருந்த பிழைத்தும் ஐந்தாம் திங்களில் கருக்கலைதல் வாய்ப்புக்க ளால் உருவாகும் கேடுகளினின்று பிழைத்தும் ஆறாம் திங்களில் கர்ப்பத்திலுள்ள பிண்டத்தில் உடலுறுப்புகள் தோன்றுவதால் உண்டாகும் அசைவுகளினின்றும் பிழைத்தும் ஏழாம் திங்களில் தாய்க்கு உண்டாகும் அச்சத்தின் தாக்கத்திலிருந்து பிழைத்தும் எட்டாம் ஒன்பதாம் திங்கள்களில் தோன்றும் துன்பங்களிலிருந்து பிழைத்தும் பத்தாம் திங்களில் தாயும் தானுமாக மிகப்பெரும் துன்பங்களை அனுபவித்து தாய் சேயைப் பெற்றெடுக்கின்றாள்.

> **வார்கடல் உலகினில்**
> **யானை முதலா எறும்பு ஈறாய**
> **ஊனமில் யோனியின் உள்வினை பிழைத்தும்**
> **மானுடப்பிறப்பினுள் மாதா உதரத்து**
> **ஈனமில் கிருமிச் செருவினில் பிழைத்தும்**
> **ஒருமதித் தான்றியின் இருமையில் பிழைத்தும்**
> **இருமதி விளைவின் ஒருமையில் பிழைத்தும்**
> **மும்மதி தன்னுள் அம்மதம் பிழைத்தும்**
> **அஞ்சு திங்களில் முஞ்சுதல் பிழைத்தும்**
> **ஆறு திங்களில் ஊறு அலர் பிழைத்தும்**
> **ஏழு திங்களில் தாழ் புவி பிழைத்தும்**
> **எட்டுத்திங்களில் கட்டமும்பிழைத்தும்**
> **ஒன்பதில் வருதரு துன்பமும் பிழைத்தும்**
> **தக்க தச மதி தாயோடு தான் படும்**
> **துக்க சாகரத் துயரிடைப் பிழைத்தும்**

என்றவாறாக பாடியுள்ளார்

கடவுளாகப்பார்க்கும் போது திருவாசகமாகவும் ஆழமாக நோக்கும் போது அறிவாசகமாகவும் விளங்கும் இந்நூலின் சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்பவர்க்கு இம்மையில் பெருவிருந்தாகவும் மறுமையில் அருமருந்தாகவும் அமைகின்றது.

**தென்னாடுடைய சிவனே போற்றி**
**எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி**


# லூட்ஸ் மாதா புனிதப்பயணம் 2025



புனித லூட்ஸ் மாதா கோவிலுக்கான பயணங்கள்

July, August மாதங்களில்

செல்ல இன்றே பதிவு செய்யுங்கள்

தொடர்புகளுக்கு:
முருகா K.Muruga Handy: (49) 0175 850 1489





விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.



# பல மனைவியர் காலத்தில் இருந்து ஒருத்தனுக்கு ஒருத்தி என்ற வரை



கௌசி சிவபாலன்
(யேர்மனி)

முதிர்ச்சியுற்ற வாழ்க்கையில் பட்ட அறிவு, தொட்ட அறிவு, ஆழ்ந்த ஞானம் பெற்றவர்கள் பிறருடைய வாழ்க்கைக்குள் வீண்பிரவேசம் செய்ய மாட்டார்கள். எது நடந்ததோ அது நன்றாகவே நடந்தது. எது நடக்க இருக்கின்றதோ அதுவும் நன்றாகவே நடக்கும் என்பதே இக்கட்டுரை. ஆனைெ லழரச ழறபெ டிரளளைநௌளள என்று கூறும் பல இளையவர்கள் விரல்களாக இக் கட்டுரையைத் தொடர்கின்றேன்.

சமூக சீர்திருத்தவாதி வெகுசன விரோதி என்பது சமுதாயத்தில் பலரால் அறியப்பட்ட வார்த்தைகளானாலும் சமுதாயத்தைத் திருத்தப் போகின்றேன் என்று பிறருடைய வாழ்க்கையில் தலையிட்டுக் கசப்பான நினைவுகளைச் சுமப்பவர்கள் அநேகம். உலகம் தோன்றிய காலத்தில் இருந்து மாறாத ஒன்று மாற்றம் மட்டுமே. இருப்பவர் இல்லாமல் போக புதிதாக ஜடப்பொருள்களும், உயிர்ப்பொருள்களும் உருவாகிக் கொண்டேயிருக்கும். நாம் மறுத்தாலும் வெறுத்தாலும் மாற்றம் நடக்காமல் இல்லை. அவ்வாறே முதிர்கன்னிகள் நிறைந்த காலம் மாறி இளம் வயதுத் திருமணங்கள் அதிகரித்தன. அந்நடைமுறை மாறி தற்காலத்தில் திருமணம் அவசியமா என்ற காலம் தோன்றியுள்ளது.

**பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர்**
**ஐயர் யாத்தனர் கரணம் என்ப**

என்கின்றது தொல்காப்பியம். ஆண் பெண் உறவிலே தவறுகள் ஏற்பட்ட போது திருமண நடைமுறைகள் வழக்கத்துக்கு வந்தன. காதலர் பழகுவதை வரையறைப் படுத்துதல் என்ற நிலையில் வரைவு என்றும் திருமணத்தைக் குறித்தனர். ஆனாலும், ஓர் ஆண் பல பெண்களை மணக்கும் முறை பழந்தமிழர் வாழ்வில் இருந்திருக்கின்றது. சங்க இலக்கியங்களில் காமக்கிழத்தி, பொருள்வயின் கிழத்தி, இல்லக்கிழத்தி என்று பல மனைவியரை அறியக்கூடியதாக இருந்தது. இத்திருமணமுறையை கண்டித்த பெண்கள் ஒருத்தனுக்கு ஒருத்தி என்ற நடைமுறையைப் பின்பற்றியதும் காலமாற்றமே.

பெண்களுக்குத் திருமணம் ஒரு பிரச்சினை என்பதைச் சென்ற மாதம் பார்த்தோம். பெண்களுடைய சுதந்திர வாழ்க்கைக்குப் பாரிய தடை என்பதை இளையவர்களின் கண்ணோட்டத்தில் நோக்கினோம். எப்போது உனக்குத் திருமணம்? நீ திருமணம் செய்வதற்கு இந்தப் பெண்ணை ஒழுங்கு பண்ணலாமா? பெண் வீட்டாருடன் நான் பேசிப் பார்க்கட்டுமா? இப்படியே எத்தனை காலம் தனியாக வாழப் போகின்றாய்? என அந்நியர்கள் தம்முடைய வாழ்க்கைக்குள் நுழைவதை இளையோர் வெறுக்கின்றனர். இவர்கள் எங்களுடைய வாழ்க்கையை எவ்வாறு தீர்மானிக்கலாம் என்று கேள்வி எழுப்புகின்றார்கள். நாம் கேட்டோமா? எதற்கு எம்மடைய வாழ்க்கைக்குள் இந்த வேண்டாத பிரவேசம்?

திருமணம் செய்ய வேண்டும் என்ற எண்ணம் தோன்றினால், நாம் திருமணம் செய்வோம். எமக்குப் பொருத்தமானவர்களை எம்மாலேயே தெரிவு செய்ய முடியும். தயவுசெய்து தரகர் வேலை யாரும் செய்ய வேண்டாம். தரகர் பொருத்தம் பார்த்த வாழ்க்கை, தரமில்லாது போகும் பட்சத்தில் நாம் வாழாவெட்டி என்ற பட்டத்தையும் சுமக்க வேண்டியவர்களாகின்றோம்.



இக்காலத்தில் ஆண்களுக்கு நிகராகப் பெண்கள் நிமிர்நது நிற்கின்ற போது, குழந்தைப் பருவத்திலிருந்து "நீ ஆண் சிங்கம்" என்று வளர்க்கப்பட்ட ஆண்களுக்கும் கூட திருமணவாழ்க்கையில் அச்சம் ஏற்படுகின்றது. தம்முடைய மீதமுள்ள வாழ்க்கை பிரச்சினை நிறைந்த வாழ்க்கையாகப் போகின்றது என்ற அச்சத்தில் திருமணத்தை வெறுக்கின்றார்கள். இதனால், எதனையும் நாம் மௌனமாய் நோக்குதல் சிறப்பே. காலம் எதையும் மாற்றும்.

நாம் கேட்டோமா? எதற்கு எம்மடைய வாழ்க்கைக்குள் இந்த வேண்டாத பிரவேசம்? என்னும் போது இந்த நல்வழி, நன்னெறி எழுதிய திருக்குறள்கள் எல்லாம் கூனிக்குறுகி நிற்பது போல் இருக்கின்றது. ஆனாலும் விரும்பியவர்களுக்கே கற்றல் வழிமுறைகளும் பிரிக்கப்பட்டுவிட்டதே. எனக்கு விரும்பிய படிப்பையே நான் படிப்பேன் என்று சுயவிருப்பம் கல்விமுறையில் இருக்கின்றது கண்கூடு.

**"வையத்துள் வாழ்வாங்கு**
**வாழ்வான் வானுறையும்**
**தெய்வத்துள் வைக்கப் படும்"**

என்று வள்ளுவர் கூறும்போது நாம் கண்ணால் காணாத வானுலகம் பற்றி இப்போது ஏன் அலட்டிக் கொள்ள வேண்டும். வையத்துள் வாழ்வாங்கு வாழ சந்தர்ப்பம், சூழ்நிலையே காரணம். இந்தச் சந்தர்ப்பத்தை இழந்தவர்களை எவ்வாறு வானுலகம் போகாமல் தண்டிக்க முடியும் என்கின்றார்கள். இவையெல்லாம் படிக்கத்தான் முடியும். எதனையும் அனுபவித்துப் பார்த்தே உணர்ந்து கொள்ள முடியும் என்கின்றார்கள்.

"சுட்டமண்ணும் பச்ச மண்ணும் ஒட்டாது" என்னும் ஒரு பழமொழி உண்டு. காலம், நிலம், சூழல் போன்ற காரணிகளால், கலாசாரப் பண்புகள் மாற்றமடையும் கால ஆச்சாரமே கலாச்சாரம் என்று எடுத்துரைத்த போது எதிர்த்து நின்ற சமுதாயம் இன்று மெல்ல மெல்ல மாறிவருவதை கண்கூடாகக் காண்கின்றோம். கால் கழுவி ஆலயத்துக்குள் பிரவேசித்த மக்கள். அழுக்கான காலுறைகளுடன் பிரவேசிப்பதைக் காணுகின்றோம். ஆலயத்துக்குள் கால் நீட்டி அமரக்கூடாது. விக்கிரகத்துக்கு முன்னே உயரத்தில் இருக்கக் கூடாது என்னும் மத அனுஸ்டானங்களை மதித்து வாழ்ந்த இனமே தமிழ் இனம். ஆனால், இன்று வயதாகிவிட்டது எம்மால் நிலத்தில் அமர முடியவில்லை. நிலத்தில் இருந்தால் எழுந்திருக்க முடியவில்லை என்று கோவிலுக்குள் கதிரை போட்டு அமருகின்றோம்.

28 ஆம் பக்கம் பார்க்க...



விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.



# முத்தமழை இங்கு கொட்டித் தீராதோ? முல்லை இரவுகள் பத்தி எரியாதோ?

முகநூல் மட்டுமல்ல பாடல் வெளி வந்த நாள் முதலே சமூக ஊட கங்களை ஆக்கிரமிப்பு செய்திருந்தது இந்தப் பாடல். பாடல் இசை வடிவம் மட்டு மன்றி பாடல் வரிகளும் கவனத்தைக் குவியச் செய்தன. பாடல் ஆசிரியர் சிவா ஆனந்த்.

பாடல் வரிகளில் கூமுல்லை“இரவுகள் என்ற சொற்கள் கவனத்தை ஈர்த்தன.

அதென்ன முல்லை இரவுகள்..?

அறிந்து கொள்வோம்.

அதற்கு அக வாழ்வுக்கும் புற வாழ்வுக்கும் இலக்கணம் வகுத்து வைத்த நமது முன்னோர்களின் சங்க கால வாழ்வியல் முறைமைகளை நோக்கிச் செல்ல வேண்டும்.

குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் மற்றும் பாலை என்று ஐந்து நிலங்களுக்கும் அவற்றுக்கே உரிய ஒழுக்கங்களும் வகுக்கப்பட்டு இருந்தன. ஐந்திணைக்கு முரிய முதற்பொருள், கருப்பொருள் மற்றும் உரிப்பொருள் என்பன உள்ளன என்பது நாம் அறிந்ததே.

முதற்பொருள் – நிலமும், காலமும்.

கருப்பொருள் – மக்கள், மாக்கள் உள்ளிட்ட நிலத்தில் காலத்தால் தோன்றும் பொருள்கள்.

உரிப்பொருள் – அக ஒழுக்கம்.

இங்கே நாம் உரிப்பொருள் குறித்தே பதிவு செய்ய உள்ளோம்.

உரிப்பொருள் என்பது யாது?

‘புணர்தல் பிரிதல் இருத்தல் இரங்கல் ஊடல் இவற்றின் நிமித்தம் என்றிவை தேருங்காலைத் திணைக்குரிப் பொருளே.‘

தொல்காப்பியர் இவ்வாறாக எடுத்து இயம்புகிறார்.

பாடலில் வருகின்ற நிமித்தம் குறித்து பார்ப்போம். அதாவது, அதன்பொருட்டு நிகழ்வது, அந்த செயலால் அதற்காக அதன் முன்னோ பின்னோ நிகழ்வது என்று பொருள்.

ஐந்திணைகளிலும் வாழ்ந்து வருகின்ற மக்கள் தலைவன் தலைவியரிடத்தில் நிகழ்கின்ற அக ஒழுக்கங்களே உரிப் பொருள் ஆகும்.

**குறிஞ்சி – புணர்தலும்**
**புணர்தல் நிமித்தமும்**
**முல்லை – இருத்தலும்**
**இருத்தல் நிமித்தமும்**
**மருதம் – ஊடலும் ஊடல் நிமித்தமும்**
**நெய்தல் – இரங்கலும்**
**இரங்கல் நிமித்தமும்**
**பாலை – பிரிதலும்**
**பிரிதல் நிமித்தமும்**

இங்கே இந்தத் திரைப்பாடலில் முல்லைத் திணை உரிப்பொருள் இருத்தலும் இருத்தல் நிமித்தமும் கையாளப் பட்டுள்ளது.

அதாவது, தலைவன் பொருள் ஈட்டுதல் உள்ளிட்ட காரணங்களுக்காக தலைவியைப் பிரிந்து செல்கையில் அவனுக்காகத் தலைவியானவள் காத்திருப்பாள். முல்லை நிலத் தலைமகன் நிரை மேய்த்தலைத் தொழிலாகக் கொண்டவன். அவனுக்காக கற்புத்திறம் வழுவாது காத்திருந்து அவனோடு இருந்து மகிழ்வது குறித்த நிகழ்வுக்கு முன்னும் பின்னும் அதன்பொருட்டு நிகழ்வன.

இப்படத்தில் நாயகனுக்காகக் காத்திருக்கும் நாயகியின் நிலையே பாடல் பொருள் ஆகும். காத்திருப்பால் நீள்கின்ற இரவுப் பொழுதுகள் என்னை எரிக்கின்றன, அதைத் தணிக்க முத்த மழையைக் கொட்டித் தீர்க்க எப்போது வருவாயோ தலைவனே.. என்று தலைவி பாடுவதே பாடல் பொருள்.

பாடல் ஆசிரியர் திறம் பாராட்டுக் குரியது. வாழ்த்துகள். இசை மட்டும் அல்ல மொழியும் சொற்களும் நன்றாக உள்ள பாடல்களே காலம் கடந்தும் நிற்கும்.

மற்ற திணைகள் உரிப்பொருள் குறித்து தேடிப்பிடித்து படித்துப் பாருங்கள்.

தமிழ் இன்பம் தரும், கூட்டும்.

**முகப்புத்தகத்திலிருந்து...**






விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.

# 45 நாட்களில் 4,000 கிலோ மீட்டர் தூரத்தை கடக்கும் இளைஞன்!



பதுளை, வெலிமடை- குருத்தலாவ பிரதேசத்தில் இருந்து கரையோர பிரதேசங்கள் ஊடாக 45 நாட்களில் 4,000 கிலோ மீட்டர் தூரத்தை நடக்க துணிந்த 48 வயது இளைஞன் அம்பாறை மாவட்டம் மருதமுனை பகுதியை சென்றடைந்தார்.

தற்போது மருதமுனை பகுதிக்கு 27 வது நாளில் வந்துள்ளதாகவும் தனது ஊர் வெலிமடை குருத்தலாவ என்றும் கரையோரங்களை தற்போது சுற்றி வருகை தந்துள்ளதாகவும் பொத்துவில் பகுதிக்கு சென்று பின்னர் பதுளைக்கு சென்று மீண்டும் தனது ஊரை அடைவதற்கு முயற்சிப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இன்னும் தனக்கு 17 நாட்கள் இருப்பதாகவும் 14 நாட்களில் இந்த பயணத்தை நிறைவு செய்தால் புதிய ஒரு சாதனை ஒன்றினை ஏற்படுத்துவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# கவலைப்படுவா எண்டுதான்

மாதவி



நன்மை செய்தவர்களுக்கு நன்றி காட்டுவது மட்டுமல்ல, அவர்களுக்கு கவலையைக் கொடுக்காமல் இருப்பதும் ஒரு விதத்தில் நன்றி தான்.

கடந்த இரண்டு வாரமாக கனடாவில் இருந்து வந்த மாமா தந்த ஒரு சுப்பர் பிஸ்கட்டை சாப்பிட்டு சாப்பிட்டு எனக்கு அவர்மீது அளவில்லாத ஒரு பிரியமே வந்துவிட்டது.

என்ன செய்வது ஒருவர் மீது நாம் பிரியம் வைத்தால் நம்மீது பதிலுக்கு அவரும் பிரியம் வைக்கவேண்டும் என்ற எந்த நிர்ப்பந்தமும் இல்லைத் தானே. அவர் என்னை விட்டு கனடா புறப்பட்டு விட, பழையபடி அவ வந்தா

என்னதான் இருந்தாலும் அவதான் எனக்குச் சொந்தம் என்பதால் மீண்டும் பழைய நினைவுகளுடன் அவ காலடியில் சரணடைந்தேன்.

இப்போ அவவும் ஒரு பிஸ்கட் தந்தா. அது அவ வழமையாகத் தருவதுதான் மிகவும் சிறிது.

பெரிது பெரிதாக இரண்டுவாரம் விரும்பிச் சாப்பிட்ட எனக்கு இது சிறிது மட்டுமல்ல கனடா மாமா தந்தது போல் சுவையும் அல்ல.

இதை என்னால் வாயில் வைக்க முடியவில்லை. அப்படிப் பழகிப் போச்சு அது. அதனால் அருகில் உள்ள பூச்சாடியில் அதன் மணணைக்கிளறிவிட்டு புதைத்து விட்டேன். என் வீட்டில் பிள்ளையள் பள்ளிக் கூடம் கொண்டுபோன சாப்பாடு, பிடிக்கவில்லை என்றால் வீடுவந்ததும் ஒளித்து



வைப்பதுபோல் நானும் ஒழித்து வேத்தேன்.

என்னுடைய காலம், அவர் அந்த பூச்சாடிக்குள் தேயிலைச்சாயத்தை கொட்டக் கிழறியதால், எனக்கு கொடுத்த பிஸ்கட் எல்லாம் பூச்சாடி மண்ணுக்குள் புதைந்து கிடந்ததைக் கணவேண்டி வந்துவிட்டது.

நன்றியுள்ள நாய்தான் நான். ஆனாலும், கனடா பிஸ்கட் சுவைக்க சுவைக்க, சாப்பிட்டதால், இதை உண்ண மனம் இல்லை.

என் எஜமானி தந்ததை சுவை இல்லை என்று சாப்பிடாமல் விட்டால் அவர் என்னை, நினைத்து, நினைத்து கவலைப்படுவார் என்றுதான், நான் சாப்பிடவில்லை என்பது தெரியாது இருக்க, பூச்சாடி மண்ணுக்குள் புதைத்தேன்.

என் எஜமான் அதைக்கண்டுபிடித்ததும் தனக்கு பிடித்தவர்களுக்கு எல்லாம் என் கதையைச் சொல்லி மகிழ்ந்தார். எல்லோரும் ஒரு நாய்க்கு இவ்வ ளவு அறிவா என்றும் வியந்தார்கள். அந்தக்கதை மாதவி க்கும் சொல்லப்பட்டது. இனி நீங்களும் பிடித்தவர்களுக்கு சொல்லலாம்.

எம்மிடம் உள்ள குணம், ஒரு உணவு எமக்கு பிடிக்கவில்லை என்றால் முகத்திலும், சாப்பிடும் விதத்திலும், ஏன் சிலதுகள் கோப்பையை வீசி எறிவதிலும் கூட பிடிக்கவில்லை என்பதைக் காட்டுவதைப் பார்த்திருக்கின்றோம்.

முடிந்தவரை பிறரைக் கவலைப்படுத்தாமல் இருப்பது எப்படி என்பதை இந்த நாயிடம் கூட நாம் கற்றுக்கொள்ளலாம்.

# 60 வது திருமண நாள் வாழ்த்துகள்

**குரும்பசிட்டி**
**கதிர்காமத்தம்பி – கமலாதேவி தம்பதிகளின்**
**60 ஆவது திருமண நாள் வாழ்த்துகள்**
**12-07-2025**



அன்னைக்கோர் ஆலயம்
அமைத்த அன்னை இல்லத்தில்
இல்லறச் சோலையை
நல்லறமாக்கி கண்ணிறைந்த
கண்மணிகள் ஐவரைப் பெற்று
முத்துக்களைக் காக்கும்
சிற்பிகளாய் அன்புடன் சீராட்டி
அரவணைத்துப் பார் போற்ற
வாழ வழிகாட்டி
அன்பான மருமக்கள்
ஆசைப் பேரக்குழந்தைகளுடன்

அழகான குடும்பம் அமைத்து
அறுபத்து ஆண்டுகள்
நீண்டது உங்கள் வாழ்வு
தமிழை நேசித்தீர் !
தாய் நாட்டில் பற்றுக் கொண்டீர் !
வரம் பெறுவீர் வல்ல இறையால் !
வைர விழாக் காணும் நீங்கள்
பவள விழாவும் காண இறையருள்
வேண்டி வாழ்த்துகின்றோம்.
வாழ்க நலமுடன் நூற்றாண்டு
வாழ்க! வாழ்க !

**அன்பு மகள்கள்: கல்பனா, காஞ்சனா, கவிதா; குடும்பத்தினர், நெதர்லாந்து.**








# நெதர்லாந்தில் முரசம் விழா!



இவ்விழா மே 24 மற்றும் 25 ஆம் தேதிகளில், மூன்றாவது முறையாக நிகழ்ந்தது.

பெரிய மேடையில் ஐரோப்பாவின் பல்வேறு நாடுகளிலிருந்து வந்திருந்த கலைஞர்களின் இசை, நடன நிகழ்ச்சிகள் மிகச் சிறப்பாக நடைபெற்றன.அது மட்டுமல்ல, பாரம்பரிய தமிழ் உணவுகள், அங்காடிகள் என்று, முநசமசயனந நகரில் உள்ள வெளிப்புற மைதானத்தில் விழாகளை கட்டியது.

தமிழர்களிடையில் உள்ள தலைமுறைகளை இணைக்கும் கலாசார நிகழ்வாக



'முரசம்' வடிவமைக்கப்பட்டது. இதைப் பற்றி விழாவின் ஒருங்கிணைப்பாளரில் ஒருவரான திரு ரமணன் கூறியதாவது: முரசம் விழா என்பது எமது தமிழ் சமுதாயத்துக்கிடையில் உள்ள பிணைப்பை வலுப்படுத்தும் முயற்சி. மூத்தவர்கள் இளையவர்கள் அனைவரும் கொண்டா



டும் ஒரு நிகழ்ச்சியாக இருக்க வேண்டும் என்பது தான் எமது ஆசை.

இவ் விழாவின் வருமானம் "SLA Foundation" வழியாக முல்லைத்-தீவில் உள்ள எமது பிள்ளைகள் பராமரிப்பு இல்லத்திற்கு அனுப்பப்படுகிறது. நாம் எம் சமூகத்திற்குத் எம்மால் இயன்றதைச் செய்ய வேண்டும் என்பதே எங்கள் நோக்கம்," என்று அவர் தெரிவித்தார்.

நிகழ்ச்சி ஏற்பாட்டர்களுக்கு பாராட்டுகளும் வாழ்த்துகளும் !

**செய்தி: சிபோ.சிவகுமாரன்**









## TSS Selm கழகம் வழங்கிய மெய்வல்லுனர் விளையாட்டுப்போட்டி 2025

கடந்த 17.05.25 அன்று நடந்த மெய்வல்லுனர் விளையாட்டுப்போட்டி மிக விறுவிறுப்பாக நடைபெற்றதைக் காண முடிந்தது. இந்த நிகழ்வை TSS Selm கழகம் ஒழுங்குபடுத்தி செய்திருந்தது. சிறுவர் இளையோர் பெரியோர் அனைவரும் மகிழ்வாகப் விளையாடினர். தாயகத்தில் விளையாடிய நினைவுகளை மனக்கண் முன் நிறுத்தியது. பேரப்பெற்றோராய் இருந்த பலர் மகிழ்ந்து உரையாடியமை காண முடிந்தது. இதனை திட்டமிட்டு குழந்தைகளின் நலன்கருதி நடாத்திய திருமதி ஆசிரியர் நகுலா சிவநாதன் பாராட்டத்தக்கவர். பிள்ளைகளுடன் ஓடியோடி அவரும் இணைந்து நடத்தியமை காலத்தின் நற்சேவையை உணர்த்தியது.

**செய்தி: நாகலிங்கம் அன்னராசா**






Nandys Restaurant Bochum, Kortumstraße 9, 44787 Bochum/GERMANY | Tel: 0049 234 610 68 540

விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.



கே.பாலா

# "பிடில்" வாசித்த நீரோ மன்னனும் வீணை இசைக்கும் தமிழரசு மன்னர்களும்

"தமிழ் தேசியத்தின் பால் உண்மையான பற்றுறுதியும் கொள்கைப் பிடிப்பும், இலட்சியமும் கொண்ட ஏனைய தமிழ்த்தேசிய கட்சிகளுடன் இணைந்து உள்ளூராட்சி சபைகளில் ஆட்சியமைக்க இணங்கிப்போக, இறங்கிப்போக இந்த தமிழரசின் சில மன்னர்களுக்கு வரட்டுக் கௌரவமும் மேதாவித் தலைக்கனமும் ஆணவமும் இடம் கொடுக்காமையினால்தான் இராணுவத் துணைக்குழுக்கள்,தமிழினத் துரோகிகள், தமிழ்,இளைஞர் யுவதிகளை படுகொலை செய்தோர்,காணாமல் போகச் செய்தோர் என்று தங்களினாலேயே குற்றம்சாட்டப்பட்டவர்களுடன் இரவு நேரத் தொடர்புகளை ஏற்படுத்தி அவர்களின் அலுவலகக் கதவுகளை வெட்கமின்றி தட்டத் தொடங்கியுள்ளனர்"

ரோம் நகரம் பற்றி எரியும்போது ரோமாபுரி மன்னன் நீரோ பிடில் வாசித்தானாம். அதாவது தன் ஆட்சிப் பொறுப்பில் இருக்கும் நாட்டின் தலைநகரம் எரிந்து மக்களது உயிரும், அவர்தம் உடைமையும் நாசமாகியதைப் பற்றிய அக்கறையற்று , பிடில் இசைத்தபடி இருந்தான் என்பது பதிவு . ஆக மோசமான, மனிதாபிமானமற்ற , பொறுப்பற்ற ஆட்சியாளனுக்கான, தலைவனுக்கான முன் மாதிரியாக வரலாற்றில் பதிவாகியுள்ளான் 'நீரோ'மன்னன்.அது மட்டுமில்லை, ஒவ்வொரு நாசகரமான ஆட்சியாளனையும் குறிப்பிடும் குறியீடாகவும் இருக்கிறான் 'நீரோ'மன்னன்.

உலகம் முழுவது உள்ள அரசியல்வாதிகளாலும் விமர்சகர்களாலும் பயன்படுத்தப்படும் இந்த மேற்கோளில் வரும் ரோமாபுரியின் நீரோ மன்னன் , போன்றவர்கள் இன்று உலக நாடுகளில் இருக்கின்றார்களோ இல்லையோ இலங்காபுரியில் அதிலும் தமிழர் தாயகப் பகுதியான வடக்கு,கிழக்கு மாகாணங்களில் அரசியல் தலைவர்களாக,தமிழ் தேசியக்கட்சிகளின் தலைவர்களாக,அரசியல்வாதிகளாக தாராளமாகவே இருக்கின்றார்கள்.

தன் ஆட்சிப் பொறுப்பில் இருக்கும் நாட்டின் தலைநகரம் எரிந்து மக்களது உயிரும், அவர்தம் உடைமையும் நாசமாகியதைப் பற்றிய அக்கறையற்று நீரோ மன்னன் ரோமாபுரியில் "பிடில்" வாசித்தான் ஆனால் .இலங்காபுரியில் உள்ள வடக்கு கிழக்குதமிழர் தாயகத்தில் தமது உரிமைக்காகவும் நிலத்திற்காகவும்,காணாமல்போன தம் உறவுகளுக்காவும் தமிழனப் படுகொலைக்காக நீதி கேட்டும் தமிழ் மக்கள் போராடிவரும் நிலையில் தமிழ்மக்களின் தலைவர்கள் நாமே என மார்தட்டிக்கொள்ளும் "தமிழரசின் மன்னர்கள்"இந்த அநீதிகளுக்கு பக்கபலமாக இருந்தவர்கள் என தம்மாலேயே குற்றம் சாட்டப்பட்டவர்களுடன் இணைந்து "வீணை" இசைக்கத் தொடங்கியுள்ளனர் தமது "மேதாவி"தலைக்கனத்தாலும் பதவி மோகத்தாலும் "நான்'என்ற அகங்காரத்தினாலும் தமிழ் மக்களின் அரசியல் தலைவர்கள் எந்தளவு கீழ்த்தரமான நிலைக்கும் இறங்குவார்கள் ,எந்தளவு கீழ்த்தரமான வேலைகளையும் செய்வார்கள் என்பது ஒன்றும் புதிய விடயமல்ல. ஆனால் அண்மையில் இலங்கையில் நடந்து



முடிந்த உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் தமிழர் தாயகமான வடக்கு,கிழக்கு மாகாணத்திலுள்ள தமிழ் தேசியக் கட்சிகளின் தாய்கட்சி எனப் போற்றப்பட்ட இலங்கை தமிழரசுக்கட்சியில் தமிழ் தேசிய முகமூடிகளுடன் "நீரோ"மன்னர்களாக இருந்த சில தலைவர்களின் முகத்திரையை கிழித்து விட்டுள்ளது.

நடந்து முடிந்த உள்ளூராட்சி சபைத் தேர்தல்களில் தொகுதிவாரி,விகிதாசார முறைமையினால் வடக்கு,கிழக்கு மாகாணங்களிலுள்ள உள்ளூராட்சி சபைகளில் ஆட்சியமைப்பதில் ஏற்பட்ட நெருக்கடிகளினாலேயே தமது தமிழ் தேசிய முகமூடிகளை கழற்றி வைத்துவிட்டு,தமிழினத் துரோகிகள், ஒட்டுக்குழு,இராணுவத் துணைக்குழு என தங்களினாலேயே குற்றம்சாட்டப்பட்ட, ஒதுக்கிவைக்கப்பட்ட தரப்புக்களின் காலடி தேடித் சென்று உள்ளூராட்சி சபைகளில் ஆட்சியமைக்க ஆதரவு கோரி "வீணை " இசைக்குமளவுக்கு இந்த தமிழரசின் சில மன்னர்கள் சிரம்தாழ்த்தி தரம் தாழ்ந்துள்ளனர்,

இவ்வாறாக உள்ளூராட்சி சபைகளில் ஆட்சியமைப்பது தொடர்பில் இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவர் சி.வி.கே சிவஞானம் தமிழினத் துரோகி,இராணுவத் துணைக்குழுத் தலைவர்,தமிழ் இளைஞர் , யுவதிகள் பலர் கொல்லப்பட்டமைக்கும் காணாமல் போனமைக்கும் காரணமானவர், தமிழரசுக்கட்சியின் தலைவராகவிருந்த மாவை சேனாதிராஜாவையே படுகொலை செய்ய முயன்றவர் என்றெல்லாம் இவர்களினாலேயே குற்றம்சாட்டப்பட்ட ஈழமக்கள் ஜனநாயகக்கட்சியின் (ஈ.பி.டி.பி.) தலைவர், டக்ளஸ் தேவானந்தாவிடம் அவரது அலுவலகம் சென்று ஆதரவு கோரி அடிபணிந்தமை தமிழ் மக்களையும் தமிழரசுக்கட்சியில் உள்ள தமிழின உணர்வாளர்களையும் கொந்தளிக்க வைத்துள்ளது.

உள்ளூராட்சி சபைகளில் இணைந்து ஆட்சியமைக்க ஏனைய தமிழ் தேசியக் கட்சிகள் ஆதரவளிக்கத் தயாராக இருந்த போதும் அவர்களுக்கு எந்தவொரு விட்டுக் கொடுப்பையும் செய்ய மறுத்து அவர்களை நிராகரித்து விட்டு ஈ.பி.டி.பி.யின் டக்ளஸ் தேவானதாவிடம் தமிழரசு சரணாகதி அடைந்துள்ளமைதான் இன்று தமிழ் தேசிய அரசியலையே கொதிப்படைய வைத்துள்ளது.

குறித்த விடயம் தொடர்பில் சி.வி.கே சிவஞானம் தன்னுடன் தொலைபேசியில் உரையாடியதாகவும் அதுமட்டுமன்றி இலங்கைத் தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த முன்னாள் தவிசாளர் ஒருவர் தன்னைச் சந்திப்பதற்குப் பல தடவைகள் முயற்சி செய்ததாகவும் அதன் பின்னரே சிவஞானம் சந்தித்து ஆதரவு கோரியதாகவும் டக்ளஸ் தேவானந்தா பகிரங்கமாக கூறியுள்ள தன் மூலம் "வீட்டுக்குள்" செல்ல டக்ளஸ் தேவானந்தா விருப்பப்படாத நிலையிலும் "வீணை" இசைக்க தமிழரசின் சில மன்னர்கள் ஆசைப்பட்டது அம்பலமாகியுள்ளது.

உள்ளூராட்சி சபைகளில் இணைந்து ஆட்சியமைப்பது தொடர்பில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சார்பில் அதன் பதில் தலைவர் சி.வி.கே.சிவஞானமும், ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் சார்பில் அதன் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தாவும் கடந்த 5 ஆம் திகதி வியாழக்கிழமை மாலை டக்ளஸ் தேவானந்தாவின் யாழ் நகரிலுள்ள ஸ்ரீதர் திரையரங்க அலுவலகத்தில் சந்தித்துப் பேசியுள்ளமையே தமிழ் தேசிய அரசியலிலும் தமிழரசுக்கட்சிக்குள்ளும் புயலைக் கிளப்பியுள்ளது.

இது தொடர்பில் கருத்து வெளியிட்ட தமிழரசுக் கட்சியின் பாராளுமன்றக் குழுத் தலைவர் சிறீதரன் எம்.பி., "உள்ளூராட்சி சபைகளில் கூட்டணி அமைப்பது குறித்து டக்ளஸ் தேவானந்தாவுடன் கலந்துரையாடுவது பற்றி கட்சியின் உயர்மட்டக் குழுவில் எவ்வித தீர்மானமும் எடுக்கப்படவில்லை. ஆகவே, இந்தச் சந்திப்பு தொடர்பில் எனக்கு எதுவும் தெரியாது.உள்ளூராட்சி சபைகளில் கூட்டணி அமைப்பது குறித்து தமிழ்த் தேசியக் கட்சிகளுடன் பேசுவதற்கே இலங்கைத் தமிழரசுக் கட்சி தீர்மானித்திருந்தது. அவ்வாறிருக்கையில் தமிழ்த் தேசியத்துக்கு விரோதமான கட்சியுடன் பேச்சுவார்த்தை நடத்துவதெனில், அது பற்றி கட்சியின் உயர்மட்டத்தில் தீர்மானம் மேற்கொள்ளப் பட்டிருக்க வேண்டியது அவசியம் எனத் தெரிவித்துள்ளார்.

இதேபோன்றே இலங்கைத் தமிழரசுக் கட்சி எந்த சந்தர்ப்பத்திலும் எமது தமிழ்த் தேசியக் கொள்கைக்கு விரோதமாக செயற்பட முடியாது. தமிழ்த் தேசியத் தலைவரின் கொள்கைக்கு எதிர்ப்பாக ஒருபோதும் நாம் செயற்படப் போவதுமில்லை. இது திண்ணம்.கட்சியின் உயர்மட்டக் குழுவின் (மத்தியகுழு) அனுமதியில்லாமல் தனிப்பட்ட முடிவுகள் எதனையும் நாம் ஏற்கவும் முடியாது அனுமதிக்கவும் முடியாது.

டக்ளஸ் மற்றும் சிவஞானத்தின் சந்திப்பிற்கு கட்சி பொறுப்பேற்க முடியாது என்பதுடன் இதனை எனது தனிப்பட்ட முடிவின் அடிப்படையில் வன்மையான எதிர்ப்பினையும் தெரிவித்துக்கொள்கிறேன் என சுமந்திரன் -சாணக்கியன் அணி விசுவாசியும் மத்தியகுழு உறுப்பினருமான மட்டக்களப்பு மாநகர சபையின் முன்னாள் மேயர் தியாகராஜா சரவணபவன் தெரிவித்துள்ளார்.



28 ஆம் பக்கம் பார்க்க...


abhinayakshetra
School of Dance
அபிநயக்ஷேத்ரா
நடனப்பள்ளி
வழங்கும்
கதிரைவேற் பெருமானே!
கருணை தேவே!
'நாட்டிய நாடகம்'
20 ஜூலை 2025
மாலை 6:30 மணிக்கு
புதிய கதிரேசன் மண்டபம்
ஆய்வு, பிரதியாக்கம், தயாரிப்பு, நெறியாள்கை
'கலாசூரி' திருமதி திவ்யா சுஜேன்
இயல், இசை ஆக்கம்
'ஞானபாநு' உயர்திரு ராஜ்குமார் பாரதி
(மகாகவி சுப்பிரமணிய பாரதியின் கொள்ளுப் பெயரன்)
கீபோர்டு , ஒலி வடிவமைப்பு
'கலைமாமணி' ஸ்ரீ சாய் ஷ்ரவணம்
DESIGNED BY UNIE ARTS
வாய்ப்பாட்டு: ஸ்ரீ ஸ்ரீகாந்த் கோபாலகிருஷ்ணன். ஸ்ரீ R.P ஷ்ரவன். ஸ்ரீமதி க்ருத்திகா அரவிந்த் | மிருதங்கம்: ஸ்ரீ கார்த்திகேயன் ராமநாதன்
தாள வாத்தியங்கள் ஸ்ரீ கணபதி வெங்கட சுப்ரமணியன் | வயலின் : ஸ்ரீ எம்பார் கண்ணன் | புல்லாங்குழல்: ஸ்ரீ நவின் சந்தர்
வீணை ஸ்ரீ வி. வி. சுப்ரஹ்மண்ய சர்மா | சிதார்: ஸ்ரீ கிஷோர் குமார் | நாதஸ்வரம்: ஸ்ரீ அடையார் D. பாலசுப்பிரமணி | ஒலிப்பதிவு: ஸ்ரீ RK சர்வேஷ்
முத்தமிழ்ச் செழுமையால் கதிர்காமன் கலைவிழா! இந்திய - இலங்கைக் கலைஞர்கள் இணையும் பெருவிழா!
தொடர்பு: +94 775 711 273



# கண் துடித்தல் தீமையின் அறிகுறியா?

என் வலது கண்ணும் துடித்தது உன்னைக் கண்டேன் அன்னாள் பொன்னாள்.

இடது கண்,வலது கண் துடித்தலென்பது சகுனம் பார்ப்பவர்களின் பார்வையில் மிகவும் கெடுதலான ஒன்றாகும். பெரும்பாலும் தீமை நடக்கப்போவதற்கான அறிகுறியாகவும் சில நேரங்களில் நற்பேறிற்கான (அதிஸ்டம்) அறிகுறியாகவும் பார்க்கப்படுகின்றது.

மனித உடலில் ஒரு தசை துடிப்பு (muscle twitch) என்பது சுமார் ஒவ்வொரு நபருக்கும் ஏதேனும் ஒரு நேரத்தில் நடக்கும் இயற்கையான நிகழ்வாகும். ஆனால் பண்டைய காலத்தில் இருந்து கண் துடிப்பது பற்றி பல நம்பிக்கைகள் நிலவுகின்றன. இது நாடுகள், மக்களின் பண்பாடுகள், மற்றும் ஆண்-பெண் ஆகிய பிரிவுகளின் அடிப்படையில் வேறுபடுகிறது.

## பொதுவான நம்பிக்கைகள்:

★ ஆண்கள்:
★வலது கண் துடித்தால் நல்லது நடக்கும்.
★இடது கண் துடித்தால் தீமை வரலாம்.
★பெண்கள்:
★இடது கண் துடித்தால் நன்மை.
★வலது கண் துடித்தால் தீமை.

## பிற நம்பிக்கைகள்:

★மேல் கண் துடித்தால் நன்மை, கீழ் கண் துடித்தால் தீமை
★ஒருவர் நம்மை நினைத்துக் கொள்கிறார்.
★ஏதோவொரு புதிய செய்தி வரப்போகிறது.
★திடீர் பயணம் இடம்பெறலாம்
★நெருங்கியவரிடம் சிக்கல் ஏற்ப டலாம்.
★ சீன மக்கள் கண் துடிப்பை "Chi"

எனும் உயிர்த் சக்தியின் மாற்றமாகப் பார்க்கிறார்கள்- காலை நேரத்தில் கண் துடித்தால் நல்லது, இரவில் துடித்தால் எதிர்மறை. இவையெல்லாம் அறிவியலால்



நிரூபிக்க முடியாத நம்பிக்கைகள். ஆனாலும், இவை மக்கள் மனதில் வேரூன்றிய பழக்க வழக்கங்களாகவே தொன்றுதொட்டு இருந்து வருகின்றன.

விஞ்ஞான ரீதியாக, கண் துடிப்பது ஒரு தசை அதிர்வு (muscle spasm) ஆகும். இது Myokymia என்று அழைக்கப்படுகிறது. இது குறிப்பாக மேல் கண்ணிமை (upper eyelid) அல்லதுகீழ் கண்ணிமை (lower eyelid ) பகுதிகளில் ஏற்படும்.

Myokymia என்பது கண் அல்லது முக தசைகள் தன்னிச்சையாக துடிப்பது.இது ஒரு வகையான "benign fasciculation" (தீங்கு இன்றிய தசை அதிர்வுகள்) ஆகும். பெரும்பாலும் சில நிமிடங்கள் முதல் சில நிமிடங்கள் வரை மட்டுமே நீடிக்கிறது.

## கண்ணிமை துடிப்பதற்கான காரணங்கள்

1. மன அழுத்தம்: மன அழுத்தம் உள்ளவர்கள் தங்கள் நரம்புகளின் செயல்பாட்டில் மாற்றத்தை காணலாம். இது தசைகள் துடிப்பதற்கு வழிவகுக்கும்.

2. தூக்கக் குறைபாடு:கண் தசைகள் தொடர்ந்து வேலை செய்யும் போது ஓய்வு இல்லாததால் சோர்வடைகின்றன. இதனால் துடிப்பு ஏற்படுகிறது.

3. அதிகளவிலான கஃபைன் அதிக அளவில் குளம்பி (Coffee) தேநீர் (Tea), இன்வட்டு (Chocolate) போன்றவை உட்கொள்வது நரம்புத் தூண்டலை அதிகரித்து தசைகள் துடிப்பை ஏற்படுத்தும்.

4. திரை நேரம்: கண்களை அதிகம் உபயோகப்படுத்தல் நீண்ட நேரம் கணிப்பொறி, தொலைக்காட்சி, அல்லது கைபேசித் திரையைப் பார்ப்பதால் கண்களில் அழுத்தம் ஏற்படுகிறது.

5. ஊட்டச் சத்துக் குறைபாடுகள்:மெக்னீசியம் (Magnesium), பாஸ்பரஸ், மற்றும் பொட்டாசியம் போன்ற ஊட்டச்சத்து குறைபாடுகள் கண் தசைகளில் சீரற்ற செயல்பாடுகளை உருவாக்கும்.



பொலிகையூர் ரேகா
(இங்கிலாந்து)

6. வெளிப்புறத் தூண்டல்கள்:தூசி, ஒளிக்கதிர்கள், அல்லது காற்று ஆகியவை கண்களைத் தூண்டி, தசை அதிர்வுகளை உண்டாக்கும்.

## அபாயகரமான காரணங்கள் (மிக அரிதானவை):

கண் துடிப்பு ஒரு நரம்பியல் பிரச்சனைக்கு அறிகுறியாக இருக்கலாம்:

★முக நரம்பு வாதம் (Bell's palsy )- திடீரென முகத்தின் ஒருபக்கம் வலுவிழந்து இயங்காமல் போவது.

★அரைமுக முறுக்கு நோய் (Hemi facial Spam) -முகத்தின் ஒருபக்கம் தானாகத் தசைகள் முறுக்கி அசைதல் (அசைவு கட்டுப்பாடில்லாமல் ஏற்படுவது).

★பன்மை நரம்புக் கோளாறு (Multiple Sclerosis) நரம்புகள் பாதிக்கப்படுவதால் உடல் முழுவதும் பல்வேறு வகையான நீடித்த பாதிப்புகள் ஏற்படுவது (மனிதனின் மைய நரம்பு மண்டலமே தாக்கப்படுகிறது)

இவை மிகக் குறைவாகவே ஏற்படும். பொதுவாக கண் துடிப்பது ஒரு சீரான வாழ்க்கை முறையால் குணமாகக்கூடிய சாதாரணமான நிகழ்வாகவே இருக்கிறது.

## கண் துடிப்பதைப் கையாளும் வழிகள்

★ தினசரி தூக்க நேரம் 6-8 மணி நேரம் உறுதி செய்ய வேண்டும்.
★ மன அழுத்தத்தை குறைக்கும் யோகா, தியானம், சுவாச பயிற்சி போன்றவை செய்யலாம்.
★குளம்பி மற்றும் கார்பனேட்டட் ஆகியவற்றைக் கட்டுப்படுத்த வேண்டும்.
★கண்களுக்கு ஓய்வளிக்க, ஒவ்வொரு 20 நிமிடத்திற்கும் 20 வினாடிகள் தொலைதூரத்தில் பார்வை செலுத்த வேண்டும்.
★கண்களை குளிர்ந்த நீரில் கழுவலாம்.

28 ஆம் பக்கம் பார்க்க...

தாயகத்தில்... வவுனியாவில் அமைந்துள்ள
"பண்டாரவன்னியன் புத்தகசாலையில்"
ஈழத்துப் புத்தகங்களை நீங்கள் பெறமுடியும்.
தொடர்புகளுக்கு:
பண்டாரவன்னியன் புத்தகசாலை
வவுனியா, இலங்கை
+94772244616
youtube@akkakuruvi
இது வெற்றிமணியின் ஒரு இலவச விளம்பரம். நம் இளஞர்கள் முயற்சிக்கு கைகொடுப்போம்!

25 ஆம் பக்கத் தொடர்ச்சி...

## "பிடில்" வாசித்த நீரோ மன்னனும்

ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தாவை தமிழரசுக்கட்சியின் பதில் தலைவர் சி.வி.கே.சிவஞானம் சந்தித்தமையானது கட்சியின் அடிமட்ட தொண்டனால் கூட ஏற்றுக்கொள்ள முடியாது.அண்மையில் பிள்ளையான் தலைமையிலான தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் செயலாளர் பிரசாந்தன் மற்றும் கருணா ஆகியோர் எங்களுடன் சேர்ந்து தமிழரசுக்கட்சி பயணிக்க வேண்டும் என்றனர்.எனவே தற்போதைய சூழ்நிலையில் சி.வி.கே.சிவஞானம் அவர்களுடனும் கூட்டு சேர வாய்ப்புள்ளது. டக்ளஸ் தேவானந்தாவுடன் கூட்டணி சேர முடிவெடுத்த இவர்களுக்கு பிள்ளையான் கருணாவுடன் கூட்டணி சேர்வது இலகுவானது என்று தமிழரசுக்கட்சியின் ஆயுட் கால உறுப்பினர் அன்பின் செல்வேஸ் தெரிவித்துள்ளார்.இதனை நிரூபிக்கும் வகையில் மட்டக்களப்பில் சில உள்ளூராட்சி சபைகளில் பிள்ளையானின் ஆதரவை தமிழரசு கோரி சில காய் நகர்த்தல்களை செய்துள்ளதாகவும் தகவல்கள் உண்டு.

இவ்வாறாக உள்ளூராட்சி சபைகளில் ஆட்சியமைக்க ஈ,.பி.டி.பி.யிடம் தமிழரசு ஆதரவு கோரியமைக்கு எதிராக தமிழ் மக்கள் மத்தியிலும் தமிழரசுக்கட்சிக்குள்ளும் எதிர்ப்புக்கள் வெளிக் கிளம்பியுள்ள நிலையில் மானிப்பாய் பிரதேச சபையில் ஆட்சியை அமைப்பதற்காக தமிழரசுக் கட்சி ஜனாதிபதி அநுரகுமார தலைமையிலான தேசிய மக்கள் சக்தியிடம் ஆதரவு கோரிய விடயம் அம்பலமாகியுள்ளது. தமிழரசு கட்சியின் மானிப்பாய் பிரதேச சபையின் உறுப்பினர்



ஒருவரே , மானிப்பாய் பிரதேச சபையின் தேசிய மக்கள் சக்தி உறுப்பினர் உறுப்பினர் ஒருவரிடம் இவ்வாறு ஆதரவு கோரியதாக தெரிவிக்கப்படுகிறது.இருப்பினும், கட்சியின் உயர்மட்ட குழுவின் தீர்மானத்துக்கு அமையவே ஆதரவு வழங்குவதா இல்லையா என முடிவு எடுக்கப்படும் என தேசிய மக்கள் சக்தியின் மானிப்பாய் பிரதேச சபையின் உறுப்பினர் கூறியதாக தகவல்கள் அம்பலமாகியுள்ளன.

உள்ளூராட்சிசபைகளில் ஆட்சியமைக்கும் விடயத்தில் தமிழ் தேசியக்கட்சிகளை புறம் தள்ளி தமிழரசுக்கட்சியின் பதில் தலைவர் சீ.வீ.கே சிவஞானம் ஈ.பி . டி.பி யின் அலுவலகத்தில் அதன் செயலாளரை ஆசனப்பங்கீடு தொடர்பில் சந்திந்தித்திருப்பது ஒரு தமிழின துரோகமாகவும் நீண்ட தியாகங்களை கொண்ட தமிழரசின் வரலாற்றில் ஒரு கறையாகவும் தலைக்கனங்களினாலும் விட்டுக் கொடுப்பின்மையினாலும் தமிழ் தலைமைகள் அழிந்த.அழிக்கப்பட்ட வரலாறு மீண்டும் எழுதப் படுவதையுமே தமிழரசின் சில மன்னர்கள் வீணை இசைக்க ஆசைப்படும் இந்த சந்திப்பு வெளிப்படுத்துகின்றது.

27 ஆம் பக்கத் தொடர்ச்சி...

## கண் துடித்தல்

★பரிந்துரைக்கப்பட்ட சத்துக்கள் கொண்ட உணவுகளை உட்கொள்ள வேண்டும்.

**பின்வருமாறு இருந்தால் மருத்துவரை உடன் அணுக வேண்டும்.**

★கண் துடித்தல் தொடர்ந்து 1 வாரத்துக்கும் மேலாக நீடித்தால்.

★ முகம் முழுவதும் தசை அதிர்வுகள் ஏற்பட்டால்.

★கண் அல்லது முகத்தில் வலி, வீக்கம், பார்வை மாற்றம் போன்றவை இருந்தால்.

★ ஒரு பக்க முகம் இயங்காமலிருந்தால்

மூடநம்பிக்கைகள், நம் செயல்பாடுகளில் தடையாக மாறுகின்றன. கண் துடித்தது என்ற காரணத்திற்காக பயணங்களைத் தவிர்ப்பது, முக்கிய முடிவுகளை மாற்றுவது போன்ற செயல்கள் நம் முன்னேற்றத்திற்கு இடையூறாக இருக்கலாம். அறிவியல் விழிப்புணர்வு மற்றும் சுயநம்பிக்கையுடன் வாழ்க்கையை முன்னேற்றம் செய்யும் சிந்தனையை வளர்க்க வேண்டும். கண் துடிப்பது என்பது இயல்பான உடல் நிகழ்வாக இருக்கலாம்.

ஆனால் அதனை சுற்றியுள்ள மூட நம்பிக்கைகள் நம்மை தவறான முடிவுகளுக்கு இட்டுச் செல்லும் அபாயம் உள்ளது. அறிவியலையும் உணர்வையும் சமநிலையுடன் பயன்படுத்தி, எந்த ஒரு உடலியல் நிகழ்வையும் சிந்தனையுடன் அணுக வேண்டும். கண் துடிக்கிறது என்றால் பயப்பட வேண்டியதில்லை, ஆனால் அதை தவறாக புரிந்து கொள்ளும் பழக்கத்தைத் தவிர்க்க வேண்டும்.

"நம்பிக்கையை அறிவால் சோதிக்கும் போது தான் உண்மையைக் கண்டறிய முடியும்."

21 ஆம் பக்கத் தொடர்ச்சி...

## பல மனைவியர்

விக்கிரகம் கண்ணைமூடி பக்தர்களுக்கு அருள்பாலித்து அவரவர் பிரச்சினை அவரவர்களுக்கு எனது கடமை பக்தர்களைக் காத்தல்என்று கதிரையில் அமர்ந்திருக்கும் பக்தர்களையும் காக்கின்ற நிலைமை தற்போது காணப்படுகின்றது. முடியாவிட்டால் ஆலயத்துக்குள் வரவேண்டாம் என்று எம்மால் எடுத்துரைக்க முடியுமா? அப்படியே எடுத்துரைத்தால், நந்தனுக்கு இறைவன் காட்சியளித்ததுபோலவும், திருப்பாணாழ்வாரைத் தனது தோளில் சுமந்து திருவரங்கத்துள் கொண்டு வரும்படி சாரங்கருக்கு திருவரங்கன் ஆணையிட்டது போலவும், தான் சூடியமாலையை இறைவனுக்கு அணிந்த ஆண்டாளை இறைவன் ஏற்றுக்கொண்டது போலவும் புலம்பெயர்ந்த வாழ்க்கையில் எவற்றையும் கடந்து போகின்றோம்.

அதேபோல இளையவர்கள் வாழ்க்கையில் என்ன நடக்கவிருக்கின்றது என்பதையும் பார்த்துக் கடந்து போவோம்.

07 ஆம் பக்கத் தொடர்ச்சி...

## மகள்களின் வாழ்கையை

தவறான கண்ணோட்டத்தில் தன் மகளுக்கும் தானே மாமியாராக மாறி திருமண வாழ்க்கையை பாதிக்கும் அம்மாக்களின் எண்ணிக்கை அதிகரித்துக்கொண்டேதான் செல்கிறது .

இது ஒரு தலைமுறை இடைவெளியில் ஏற்பட்ட பாரிய மாற்றம் என்றுகூட நாம் எடுத்துக்கொள்ளலாம் . ஏனெனில் எண்பதாம் ஆண்டுகளுக்கு பின்னர் பெண்கள் எல்லோருமே கட்டாயமாக கல்வி கற்றுக் கொண்டார்கள் , தொழில்களிலும் இணைந்து கொண்டார்கள் . அப்படி பெண் சம்பாத்தியம் என்பது , பெண் பொருளாதார சுதந்திரம் என்கிற ஒன்றைக்கொடுத்தவுடன் , தன்னைப்பெற்றவர்களை பெண்ணே பராமரிக்க ஆரம்பித்தாள் . குறித்த பெண்ணின் பண நிர்வாகம் அவளைப்பெற்ற தாயிடம் இயல்பாகவே சென்று சேரவே , இங்கு மறைமுகமாக பெண்ணைப்பெற்ற தாயின் "அதிகாரம்" வளர ஆரம்பித்திருக்கலாம் . இந்த அதிகாரத்தினை அவ்வளவு சீக்கிரம் இழந்துவிட சில அம்மாக்கள் தயாராக இல்லாத நிலையிலேயே அது மகளின் வாழ்க்கையில் ஏதோ ஒருவகையில் பிரச்சினையாக உருவெடுக்கவும் ஆரம்பிக்கிறது . இங்கே சில அம்மாக்கள் சில படி முன்னே போய் எங்கே தன மகள் திருமணமாகிப் போய்விட்டால் தம்மை பார்த்துக்கொள்ள யாரும் இல்லை என்கிற அச்ச உணர்வில் தன்சொந்த மகள்களின் வாழ்விலேயே சுயநலவாதிகளாக மாறிவிடுகிறார்கள் .

சில அம்மாக்களோ தான் தன் மாமியார்களினால் எதிர்நோக்கிய இன்னல்களை தன் மகள்களும் அனுபவித்துவிடக்கூடாது என்கிற எச்சரிக்கை உணர்வுடன்கூட ஆரம்ப காலகட்டத்திலேயே மகள்களிடம் சூதானமாக நடந்துகொள் , முடிந்தால் கணவனை தனியாக கலட்டிக்கொண்டு வந்துவிடு என்று கூறுவதும் உண்டு . ஆனால் இந்த இரண்டாவது காரணத்தைவிட , நான் முதலில்கூறிய காரணமே அதிகம் ! ஏற்றுக்கொள்ள கடினமாக இருந்தாலும் இதுதான் இன்றைய யதார்த்தம் , முடிந்தவரை தன்னுடைய மகளை அவளது கணவர் குடும்பத்திடமிருந்து கத்தரிக்கும் வேலையை கச்சிதமாக தற்போதைய பெண்ணை போன்ற அம்மாக்கள் செய்து வருகின்றார்கள் , என்பதும் அதனது பின் விளைவுகளை அவளது மகளே மொத்தமாக அனுபவிக்க நேரிடும் என்பதை உணர மறுக்கிறாள் என்பதும் கவலைக்குறிய ஒன்றே .

முன்புபோல் கூட்டுக்குடும்பங்களோ , கணவரின் மற்றும் கணவரின் குடும்பத்தாரின் கட்டுப்பாட்டுக்குள் பெண்கள் வாழ்வதோ வெகுவாக மாறியிருக்கும் இன்றைய காலகட்டத்தில் , நம் பெண்கள் சுய மரியாதையுடனும் , பொருளாதார சுதந்திரத்துடனுமே அநேகமாக வாழ்ந்துவருகின்றனர் (ஒரு சில விதிவிலக்குகள் இன்றும் உண்டு) ஆக, பிரச்சினையே இல்லாத விடயங்களைக்கூட ஊதிப்பெருக்காமல் , கணவர் குடும்பத்தினருடன் அண்டவிடாமல் , சகுனிவேலை பார்க்காமல் இந்த பெண்ணைப் பெற்ற அம்மாக்கள் தானுண்டு தன் வேலையுண்டு என்று வாழ தலைப்படுவார்களாயின் நம் அநேக குடும்பங்கள் நிம்மதியாக , பிரிந்துபோகாமல் வாழக்கூடும் !

பெண்களே உங்கள் அம்மாக்கள் உங்களிடம் போட்டுக்கொடுக்க முனையும்போது அதை லாவகமாக கையாளக்கற்றுக்கொள்ளுங்கள் . உங்கள் அம்மாவேயானாலும் தவறான கருத்துக்களை திணிக்க முயலும்போது அவற்றை உடனே நிராகரித்து நகர்ந்துசென்றுவிடுங்கள் . அதை காது கொடுத்து கேட்க ஆரம்பித்தால் நிச்சயம் நம் மனம் மெல்லமெல்ல விஷமாகும் வாய்ப்புண்டு . நாம் திரைப் படங்களில் பார்த்துவளர்ந்த மோசமான மாமியார் கொடுமை , நாத்தனார் கொடுமை, கணவர் கொடுமை எல்லாமே தற்போது காற்றோடு கரைந்தொழிந்தாயிற்று. வாழ்க்கை அழகானது , சுவாரஸ்யமானது அதை நம்மை சுற்றியுள்ள மனிதர்களுடன் கொண்டாடி தீர்ப்போமாக !






விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.

03 ஆம் பக்கத் தொடர்ச்சி...



# செம்மணி மனிதப் புதைகுழி இன அழிப்பின் அடையாளம்

வரையான புதைகுழிகளை தன்னால் காண்பிக்க முடியும் எனவும் குறிப்பிட்டிருந்தார். அதேபோல்,சோமரத்ன ராஜபக்ஷவுடன் குற்றவாளியாக இனம்காணப்பட்டிருந்த ஏ.எம். பெரேரா தனது வாக்குமூலத்தில், ஒரே புதைகுழியில் மட்டும் 25 முதல் 30 வரையான சடலங்கள் ஒன்றாகப் போடப்பட்டு புதைக்கப்பட்டுள்ளன என தெரிவித்திருந்தார்.

அதனடிப்படையில் இவர்களுடைய வாக்குமூலங்களை வைத்துக்கொண்டு செம்மணி மனிதப் புதைகுழி தோண்டும் பணி 1999 ஆம் ஆண்டு நடைபெற்றது. சுமார் ஒன்பது மாதங்கள் நடைபெற்ற இந்த பணியில் 25 புதைகுழிகள் தோண்டப்பட்டு 16 சடலங்கள் மீட்கப்பட்டன. இவ்வாறு மீட்கப்பட்ட 16 பேரினது சடலங்களும் அடித்துக் கொலை செய்யப்பட்டவை என செம்மணி புதைகுழி விவகாரத்தை கையாண்டிருந்த விசேட நீதிபதி மா.இளஞ்செழியன் மரண தண்டனை விசாரணை தீர்ப்பில் குறிப்பிட்டிருந்தார். அந்த 16 சடலங்களில் இரண்டு உடல்கள் 1996 இல் காணாமல் போன ஆண்கள் என அடையாளம் காணப்பட்டது. இதையடுத்து ஏழு இராணுவத்தினர் அடையாளம் காணப்பட்டு கைது செய்யப்பட்டு குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டன. எனினும் வழக்கு கொழும்பு மேல் நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டு சில மாதங்களின் பின்னர் ஏழு பேரும் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

இந்த பின்னணியில்தான் 25 வருடங்களுக்கு பின்னர் மீண்டும் செம்மணி பகுதியில் காணப்படும் புதைகுழிகளை தோண்டும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. நீண்டகால போர் இடம்பெற்ற தமிழர் தாயகத்தில் பல இலட்சம் மக்கள் காணாமல் போயிருக்கிறார்கள்.குறிப்பாக இறுதி யுத்தத்தில் மாத்திரம் இலட்சக்கணக்கான தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டனர், ஆயிரக்கணக்கானவர்கள் காணாமலாக்கப்பட்டனர், தொண்ணூறாயிரம் பெண்கள் விதவைகளாக்கப்பட்டனர், ஒன்பதாயிரம் சிறுவர்கள் அனாதரவாக்கப்பட்டுள்ளனர்.

போர் நடைபெற்ற தமிழர் பிரதேசத்தில் இதுவரை 13 இடங்களில் புதைகுழிகள் இருப்பதாக சந்தேகிக்கப்படுகிறது. இதில் பல இடங்களில் புதைகுழிகள் தோண்டப்பட்டுள்ளன. மன்னார் திருக்கேதீஸ்வரம் பகுதியில் 2013 ஆம் ஆண்டு புதைகுழி ஒன்று கண்டுபிடிக்கப்பட்டு அகழப்பட்டதுடன் இங்கு மீட்கப்பட்ட எலும்புக்கூடுகள் அமெரிக்காவிலுள்ள புளோரிடா மாநிலத்துக்கு ஆய்வுக்காக அனுப்பப்பட்டிருந்தன. ஆனால் இங்கு மீட்கப்பட்ட எலும்புக் கூடுகள் மன்னர் காலத்தைச் சேர்ந்தவை என்று கூறப்பட்டு அந்த விவகாரம் மூடி மறைக்கப்பட்டது. அதேபோல் மன்னார் நகரிலுள்ள ச.தொ.ச கட்டடத்துக்கு அருகில் 2018 ஆம் ஆண்டு அகழ்வுப்பணி இடம்பெற்றபோது அங்கும் மனிதப் புதைகுழி கண்டுபிடிக்கப்பட்டது. அந்தப் பகுதிகளிலும் அகழ்வுப்பணி இடம்பெற்றதுடன், இந்த விவகாரம் தற்போதும் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது. மேலும்,முல்லைத்தீவு கொக்குத்தொடுவாய் பகுதியில் அகழ்வுப்பணி இடம்பெற்றபோது 2023 ஆம் ஆண்டு ஜூன் மாதம் மனித புதை குழி கண்டுபிடிக்கப்பட்டது.இவ்வாறு தமிழர் தேசமெங்கும் பல மனித புதைகுழிகள் இருக்கின்றன.

30 வருட யுத்தத்தில் ஈழத்தமிழினம் இழந்தவை பல.அவற்றில் பெறுமதியான உயிர்கள் பல காவுகொள்ளப்பட்டிருக்கின்றன.யுத்த களத்தில் பலியான உயிர்களை விட, திட்டமிட்டு இன அழிப்பு என்ற போர்வையில் இராணுவத்தால் படுகொலை செய்யப்பட்டவர்கள் தான் அதிகம் என்பதற்கு பல சாட்சிகள் இன்றும் இருக்கி ன்றன. வடக்கு-கிழக்கில் யுத்தம் நடைபெறவில்லை-இன அழிப்பே நடந்தது என்பதற்கு பல ஆதாரங்கள் சர்வதேச சமூகத்தின் முன் வைக்கப்பட்டிருக்கிறது.அதில் ஒன்றுதான் இந்த செம்மணி புதைகுழியும். அந்த டிப்படையில், இராணுவத்தால் திட்டமிட்டு கொன்று குவிக்கப்பட்ட தமிழ் மக்கள் ஆங்காங்கே புதைக்கப்பட்டனர். அந்த புதைகுழிகளே தற்போது வெளிப்பட்டு வருகின்றன.செம்மணிப் பகுதியில் தற்போது அடையாளம் காணப்பட்டுள்ள புதைகுழி தொடர்பில் உரிய விசாரணைகள் நடத்தப்படவேண்டும் என காணாமல் போனவர்களின் உறவினர்கள் கோரிக்கை விடுத்து வருகின்றனர். அகழ்வுப்பணிகள் உரியவகையில் மேற்கொள்ளப்பட்டு எந்தக்காலப்பகுதியில் இந்தப் படுகொலைகள் இடம்பெற்றன, இதற்கு பொறுப்பானவர்கள் யார் என்ற விடயங்கள் கண்டறியப்படவேண்டும் என தமிழர் தாயகத்தில் இருந்து கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டு வருகின்றன.

இறுதி யுத்தத்தின்போது பல்லாயிரக்கணக்கான மக்கள் காணாமல் போகச் செய்யப்பட்டுள்ளனர். இராணுவத்தினரிடம் சரணடைந்தவர்கள், இராணுவத்தினரிடம் உறவினர்களால் ஒப்படைக்கப்பட்டவர்கள், இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டவர்கள், இராணுவத்தினரால் கடத்தப்பபட்டவர்கள் என பலரும் காணாமல் போகச்செய்யப்பட்ட பட்டியலில் இருக்கிறார்கள்.அவர்களுக்கு என்ன நடந்தது என்ற கேள்வியுடன் கடந்த 16 வருடங்களுக்கு மேலாக அவர்களது உறவுகள் வீதிகளில் போராடி வருகிறார்கள்.அவர்களுடைய போராட்டங்களுக்கு சர்வதேச சமூகமோ இலங்கையின் ஆட்சியாளர்களோ இதுவரை எந்த பதிலையும் வழங்கவில்லை.வழங்குவதற்கு இவர்கள் எவரும் தயாருமில்லை.

செம்மணி போன்ற மனித புதைகுழிகள் இலங்கையின் படையினரும் ஆட்சியாளர்களும் செய்த குற்றங்களுக்கு தகுந்த சாட்சிகளாக இருக்கின்றன.இது தொடர்பில் சர்வதேச சமூகம் கவனத்தில் கொண்டு தமிழர் தாயகத்தில் காணப்படும் ஆயிரக்கணக்கான புதைகுழிகள் தொடர்பில் கவனம் செலுத்தி அவற்றை தோண்டுவதன் மூலம் இலங்கை செய்த அட்டூழியங்களை வெளியுலகுக்கு கொண்டுவர முடியும் என்பது உறவுகளை இழந்து தவித்துவரும் மக்களின் ஏக்கமாகும்.

ஐ.நா.மனித உரிமைகள் பேரவையின் உயர்ஸ்தானிகர் இலங்கைக்கு வரவிருக்கும் நிலையில்,செம்மணி விவகாரம் பேசுபொருளாக அமைந்திருக்கும் சூழலில் அவருடைய நேரடி கவனத்துக்கு இந்த விவகாரத்தை கொண்டு செல்வதற்கான ஏற்பாடுகளை முன்னெடுப்பது காலத்தின் தேவையாகும். 16 ஆண்டுகளாக உறவுகளுக்கு என்ன நடந்தது என்று தெரியாமல் போராடிவரும் மக்களுடன் தமிழர் தேசம் ஒட்டுமொத்தமாக இந்நேரத்தில் இணைந்து கொள்வது இலங்கை அரசுக்கு மிகப் பெரும் தலையிடியாக மாறும். அதனூடாக அரசாங்கத்துக்கு ஒரு அழுத்தத்தை கொடுக்கமுடியும் என்பதுடன்,எதிர்வரும் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் புதியதொரு தீர்மானத்தை கொண்டுவர முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில், அதனை வலுப்படுத்துவதற்கு இந்த செம்மணியை பயன்படுத்தமுடியும்.

ஆகவே,செம்மணி விவகாரத்தை தமிழ் அரசியல்வாதிகளும் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளும் ஒட்டுமொத்த தமிழர் தேசமும் ஓரணியில் திரண்டு சர்வதேசத்துக்கு ஒரு வலுவான செய்தியை கொடுப்பதற்குரிய காலகட்டம் வந்திருக்கிறது.தமிழ் மக்களின் குறிப்பாக பாதிக்கப்பட்ட மக்களின் உணர்வுகளை மதித்து ஒரு காத்திரமான பணியை முன்னெடுப்பதற்கு தமிழர் தேசம் தயாராகவேண்டும். தமிழர்களுடைய எழுச்சியிலேயே தமிழர் தேசத்தின் விடுதலையும் தமிழர் தேசம் எதிர்கொண்ட அநீதிகளுக்கான நீதியும் தங்கியிருக்கிறது.ஆகவே கிடைக்கும் சந்தர்ப்பங்களை வைத்துக் கொண்டு அடுத்த கட்டத்துக்கான பயணத்துக்கு தமிழர் தேசம் செல்வதிலேயே தேசத்தின் விடுதலை தங்கியிருக்கிறது.அதற்கு சுயநலமற்ற -ஓரணியில் பயணிக்கின்ற சமூக கட்டமைப்பு உருவாக்கப்படவேண்டும். ஓர் இனம்-ஓர் தேசம் என்ற கட்டமைப்புக்குள் தமிழ் மக்களும் புலம்பெயர் மக்களும் அரசியல்வாதிகளும் திரளும் பட்த்திலேயே தமிழர்களுடைய கனவு நனவாகும். ■





விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.



# "கலைவிளக்கு" சு.பாக்கியநாதன் 75

**SAALBAU DORTMUND MENGEDE**

Mengeder Markt -10 44359 Dortmund.Germany

**12.07.2025**
**சனிக்கிழமை**
**15.00 மணி**

- **விளக்கேற்றல்**
- **அகவணக்கம்**
- **வரவேற்பு**
- **சிறப்பு விருந்தினர்**
  பேராசிரியர் மு. நித்தியானந்தன்
  (யாழ்ப்பாணம்
  பல்கலைக்கழக முன்னாள் பேராசிரியர்)
- **வாழ்த்துரைகள்**
- **கலை நிகழ்ச்சிகள்**

  கலைவிளக்கு சு.பாக்கியநாதன்
  அவர்கள் குறித்த ஆவணப்படம்
- **நூல் வெளியீடு :**
  கலைவிளக்கு
  சு.பாக்கியநாதன் B. A, M. A
  அவர்களின் பவளவிழா சிறப்பிதழ்
  வேர்களும் பூக்கின்றன
  (வெற்றிமணி வெளியீடு 31)
- **வெளியீட்டுரை**
  வேர்களும் பூக்கின்றன
  பேராசிரியர். மு நித்தியானந்தன்.
- **'வேர்களும் பூக்கின்றன.**
  **வேர்களின் ஆழம் பற்றி**
  எழுத்தாளர், ஆய்வாளர்
  திரு.வி.சபேசன்
- **பூக்களின் வாசம் பற்றி**
  இதழியல் கலை வேள்
  த. இரவீந்திரன்.
- **வேர்களும் பூக்கின்றன**
  **நூலாசிரியர் உரை**
  மு. க. சு. சிவகுமாரன்.B. F. A
- **பதிலுரை**
  கலைவிளக்கு
  சு.பாக்கியநாதன் B. A, M. A
- **நன்றியுரை**




**அன்று முதல் இன்று வரை கலை,**
**கல்வி, இலக்கியம், சமூகம் என வாழ்ந்துவரும் கலைவிளக்கு**
**சு.பாக்கியநாதன் அவர்களை**
**வாழ்த்துவோம், மகிழ்வோம் வாருங்கள்.**



சிறப்பு விருந்தினர்: பேராசிரியர் மு.நித்தியானந்தன்
(முன்னாள் பேராசிரியர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)

தமிழர் அரங்கம் | வெற்றிமணி | அகரம் | தமிழ் ரைம்ஸ் TAMIL TIMES

# கை கொடுக்கும் 2025?



மாரி செல்வராஜ் இயக்கத்தில் தனுஷ் நடித்த கர்ணன் படத்தின் மூலம் தமிழில் அறிமுகமானவர் மலையாள நடிகை ரஜிஷா விஜயன். அதைத் தொடர்ந்து சூர்யா நடித்த ஜெய் பீம் படத்திலும் கார்த்தி நடித்த சர்தார் படத்தில் அவருக்கு ஜோடியாகவும் நடித்திருந்தார்.

தொடர்ந்து மலையாள படங்களிலேயே கவனம் செலுத்தி நடித்து வந்த இவருக்கு கடந்த 2024ல் எந்த ஒரு படமும் வெளியாகவில்லை .. அதே சமயம் இந்த வருடம் தமிழில் இரண்டு, மலையாளத்தில் இரண்டு என நான்கு படங்களில் நடித்த வருகிறார் ரஜிஷா விஜயன்.

அதில் சர்தார் படத்தின் இரண்டாம் பாகமும் ஒன்று. அது மட்டுமள்ள கர்ணன் படத்தின் மூலம் இவரை தமிழுக்கு அழைத்து வந்த இயக்குனர் மாரி செல்வராஜின் இயக்கத்தில் துருவ் விக்ரம் நடிப்பில் உருவாகியுள்ள பைசன் காளமாடன் படத்திலும் இவர் கதாநாயகியாக நடித்துள்ளார். இது தவிர மலையாளத்தில் மம்முட்டி வில்லனாக நடிக்கும் களம் காவல் படத்தில் கதாநாயகியாக நடிக்கும் ரஜிஷா, தற்போது அன்ரனி வர்கீஸ் கதாநாயகனாக நடிக்கும் கட்டாளன் படத்திலும் கதாநாய கியாக ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார். இதில் பைசன் மற்றும் சர்தார் 2 ஆகிய படங்கள் இந்த வருடமே வெளியாக வாய்ப்பு இருப்பதால் இந்த வருடம் ரஜிஷா விஜயனுக்கு கை கொடுக்கும் என எதிர்பார்க்கலாம்.



# சென்னையில் திரையிடப்பட்ட ‘தீப்பந்தம்’

இலங்கை தமிழர்கள் உருவாக்கிய ‘தீப்பந்தம்‘ என்ற படத்தின் பிரத்தியேக காட்சி சென்னையில் திரையிடப்பட்டது. பிறகு நடந்த நிகழ்ச்சியில் ஓவியர்கள் மருது, புகழேந்தி, இயக்குநர்கள் வ.கௌதமன், கவிதா பாரதி, ராசி அழகப்பன், கேந்திரன் முனியசாமி, அஜயன் பாலா மற்றும் ஜாகுவார் தங்கம், முத்துக்காளை, சவுரி ராஜன் பங்கேற்று படத்தை பாராட்டி பேசினர்.

ராஜ் சிவராஜ் இயக்கத்தில் தமிழருவி சிவகுமார், ஏழுமலைப்பிள்ளை, மதிசுதா, கில்மன், கஜன் தாஸ், ஆகாஷ் நடித்துள்ளனர். பூவன் மதீசன் இசை அமைத்து எழுதிய கதைக்கு ராஜ் சிவராஜ், பூவன் மதீசன், அருண் யோகதாசன் திரைக்கதை எழுதியுள்ளனர். ஏ.கே.கமல் ஒளிப்பதிவு செய்துள்ளார்.

# அஜித் ஜோடியாகும் ஸ்ரீநிதி ஷெட்டி

அஜித்தின் 64ஆவது திரைப்படத்தைத் ‘வேல் பிலிம் இன்டர்நேஷனல்‘ நிறுவனம் தயாரிக்க உள்ளதாகத் தெரிகிறது. படத்துக்கான நாயகியாக, நடிகை ஸ்ரீநிதி ஷெட்டியுடன் பேச்சுவார்த்தை நடைபெற்று வருகிறதாம். அஜித், இந்த படத்தின் படப்பிடிப்புக்காக வரும் நவம்பர் மாதம் தான்திகதிகள் ஒதுக்கியுள்ளார். அதற்கு முன்னதாக, அஜித்தின் காட்சிகள் இல்லாத பகுதிகளைப் படமாக்க இயக்குநர் ஆதிக் ரவிச்சந்திரன் திட்டமிட்டுள்ளார். இந்தப் படத்தின் அதிகாரப்பூர்வ அறிவிப்பு மிக விரைவில் வெளியாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.





# கூலியில் 6 நிமிடங்கள் மட்டுமே

ரஜினியின் கூலி படத்தில் இந்திய சினிமாவின் முன்னணி நடிகர்களான நாகார்ஜ/னா, உபேந்திரா, சத்யராஜ், சௌபின் சாஹிர் மற்றும் அமிர் கான் ஆகியோர் நடிக்கின்றனர்.

சிறப்பு தோற்றத்தில் அமீர்கான் கூலி படத்தில் நடித்துள்ள நிலையில் 10 நாட்கள் நடித்ததாகவும்,

தன்னுடையக் காட்சிகள் படத்தில் ஆறு நிமிடங்கள் இடம்பெறும் எனவும் கூறியுள்ளார். அமீர் கான் இருப்பதால் வட இந்தியாவில் கூலி படத்துக்கு மிகப்பெரிய வரவேற்பு கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# நாயகியான ஊர்வசியின் மகள்



பிரபல நடிகை ஊர்வசியின் மகள் தேஜா லட்சுமி, திரையுலகில் கால் பதிக்கப் போவதாக வெளியாகியுள்ள செய்திகள் ரசிகர்களை உற்சாகப்படுத் தியுள்ளன.

கமல்ஹாசன் போன்ற பல நட்சத்திரங்களுடன் இணைந்து நடித்த ஊர்வசி, ‘முந்தானை முடிச்சு‘ படத்தின் மூலம் தமிழ் சினிமாவுக்கு அறிமுகமானார். அதன் பிறகு பல வெற்றிப் படங்களில் நாயகியாக ஜொலித்தார், குறிப்பாக ‘மைக்கேல் மதன காமராஜன்‘ போன்ற படங்கள் பெரும் வரவேற்பைப் பெற்றன.தற்போது பல்வேறு படங்களில் குணச்சித்திர வேடங்களில் நடித்து வரும் ஊர்வசி, தன் மகள் தேஜா லட்சுமியை மலையாளத் திரையுலகில் நாயகியாக அறிமுகம் செய்யவுள்ளார்.

‘சுந்தரி அவள் ஸ்டெல்லா‘ எனும் பெயரில் உருவாகும் படத்தில்தான் தேஜா லட்சுமி கதாநாயகியாக நடிக்கிறார்.

மகளின் இந்த முடிவுக்கு, ஊர்வசியின் முதல் கணவரும் சம்மதம் தெரிவித்ததாகவும், மகள் தன் தந்தையிடம் ஆசி பெற்று வருமாறு ஊர்வசி அனுப்பியதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.







விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.













விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.